பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 22 திங்கட்கிழமை (07.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 252

-7 AUG 2006

# இனி எந்தப் படை நடவடிக்கையும் யுத்தப் பிரகடனமாகக் கருதப்படும்!



## நோர்வே ஊடாக அரசுக்கு புலிகள் இறுதி எச்சரிக்கை

கிளிநொச்சி, ஓகஸ்ட் 07

"தமிழர் தாயகப் பிரதேசங்கள் மீது மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கைகள் என்ற சாட்டில் வான் வழித் தாக்குதல்களையும், ஷெல், பீரங்கித் தாக்குதல்கள், படை நகர்வுகள் போன்ற வலிந்து தாக்கும் நடவடிக்கைகளை அரசுத் தலைமை இனியும் மேற்கொள்ள முயற்சிக்குமானால் அது போர்நிறுத்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டு முழு அளவிலான போரைப் பிரகடனம் செய்யும் நடவடிக்கையாகவே கருதப்படும்." - இவ்வாறு நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக ஸ்ரீலங்கா அரசுத் தலைமைக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர் விடுதலைப் புலிகள்.

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் இந்த உறைப்பான செய்தியை நேற்றுத் தம்மைச் சந்தித்த நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன் போவரிடம் நேரில் தெரிவித்திருக்கிறார் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

போர்ப் பதற்றத்துக்கு மத்தியில் கொழும்புக்கு வருகை தந்த நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன் போவர் நேற்று முற்பகல் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் விசேட தூதருடன் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்.

நேற்றுக் காலை 9.30 மணி முதல் சுமார் இரண்டு மணி நேரம் புலிகள் தரப்பினருடன் போவர் பேச்சு நடத்தினார்.

பேச்சுகள் நிறைவடைந்த பின்னர் வழமை போல அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார்.

விசேட தூதர் ஹன்ஸன் போவருடன்
(02ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் ஒருவர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம்,ஓக,7

கோப்பாயில் சைக்கிள் கடை நடத்திவந்த இளம் குடும்பஸ்தர் நேற்று பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கந்தையா சுதாகரன் (வயது-33) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

கோப்பாய் பிரதேச செயலகம் முன்பாக சைக்கிள் திருத்தும் நிலையம் ஒன்றை நடத்தி
(16ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் நேற்றிரவு சூடு!

யாழ்ப்பாணம், ஓக.7

ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் நேற்று முன்னிரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார் மற்றைய இளைஞருக்கு என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை.

மேசன்வேலை செய்பவர்களான மேற்படி
(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாறு கால்வாயைத் திறந்துவிட புலிகள் இணங்கியும் அதை நிராகரித்து பலவந்தமாக தானே திறக்க அரசு முடிவு

### நேற்றுமாலை அப்பகுதியில் அகோர ஷெல்வீச்சு! அணையைத் திறக்கச் சென்றோர் அருந்தப்பு!



ஷெல் வீச்சை அடுத்து பதுங்குகுழிக்குள் பதுங்கிக் கொண்ட கண்காணிப்புக் குழுத் தலைவரும் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும்.

கொழும்பு, ஓக.7

நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவர் நேற்று கிளிநொச்சிக்குச்சென்று புலிகளின் தலைமையுடன் பேச்சு நடத்தியதை அடுத்து, மாவிலாறு கால்வாய் நீரோட்டத்தைத் திறந்து விடப் புலிகள் இணங்கினர்.

ஆனால், அந்த முடிவுக்கு அமைய அதைத் திறப்பதற்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் புலிகளின் பிரதிநிதிகள் மாவிலாறு கால்வாய்ப் பகுதிக்குச் சென்றபோது அவர்கள் மீது கடுமையான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதால், அவர்கள் மண்ணில் விழுந்து எழும்பி, பதுங்கு குழிகளில் பதுங்கிக்கிடந்து ஒருவாறு தப்பி மீண்டு வந்தனர்.

இதனால், கால்வாய்க் கதவுகள் திறக்கப்படவில்லை.

கால்வாய்க் கதவுகளைத்திறப்பது மனித நேய விவகாரம் அதற்குப் புலிகள் எந்தவித மான நிபந்தனையையும் விதிப்பதை ஏற்க முடியாது. நிபந்தனையின் பேரில் அந்தக் கால்வாய்க் கதவுகளைத் திறக்கத் தேவையில்லை. எம்மால் - எமது படைகளால் - நேரடியாகச் சென்று கால்வாய்க் கதவுகளைத் திறக்கமுடியும்" - என்று இலங்கை அரசு அறிவித்தது.

மாவிலாற்றில் மூடப்பட்ட அணைக்கட்டைத் திறந்து கால்வாயில் நீரோட்டத்தை அனுமதிப்பதற்குப் புலிகள் நேற்றுக் காலை நிபந்தனையுடன் இணங்கினர்.

சம்பூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களின் ஆதங்கங்களைக் கவனத்தில் எடுத்து, அவர்களின் அன்றாட, அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நடவடிக்கை
(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆற்றைத் திறப்பதற்கான நல்ல ஒரு தீர்வு கடைசி நேரத்தில் கைவிட்டுப் போனது

### எனினும் தமது முயற்சி தொடரும் என்கிறார் கண்காணிப்புக் குழுத் தலைவர்

மாவிலாற்றுப் பிரச்சினைக்கு நல்ல தீர்வைக் கண்டுவிட்டோம் என்று நினைத்தோம். ஆனால், அணையைத் திறப்பதற்கு நாங்கள் அங்கு சென்றபோது அவர்கள் (படையினர்) ஷெல் அடித்தார்கள். அதனால் கடைசிநேரத்தில் எமது அந்தத் தீர்வு கைவிட்டுப்போனது.

இவ்வாறு விசனத்துடன் தெரிவித்திருக்கிறார். இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன்.

நேற்று மாலையில் மாவிலாறு அணையைத் திறந்துவிடுவதற்கென விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் அந்தப் பகுதிக்குச் சென்றார் கண்காணிப்புக்குழுத்தலைவர். அந்தவேளையில் (16ஆம் பக்கம் பார்க்க)

## மங்கள இந்தியா விரைவு

கொழும்பு, ஓக.7

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று இந்தியாவுக்குச் சென்றுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது இலங்கையின் தற்போதைய நிலை குறித்து இந்தியத் தலை
(16ஆம் பக்கம் பார்க்க)

## நிபந்தனைக்கு அரசு ஒருபோதும் பணியாது மாவிலாறு அணையைத் திறந்தே தீருவோம்!



### அமைச்சர் ரம்புக்வெல சூளுரை

மாவிலாறு அணையைத் திறப்பதற்குப் புலிகள் விதித்திருக்கின்ற நிபந்தனைகளுக்கு அரசு ஒருபோதும் பணியாது. இறைமையுள்ள அரசு என்ற வகையில் இந்த விடயத்தில் எந்தச் சவாலையும் எதிர்கொண்டு அணையைத் திறந்தே தீருவோம்.

இவ்வாறு சூளுரைத்திருக்கின்றார் அமைச்சரும் பாதுகாப்புப் பேச்சாளருமான ...

## மூதூர் பகுதி மீது நேற்றிரவு ஷெல் வீச்சு 15 தமிழர்கள் பலி; 20 பேர் படுகாயம்!

திருமலை, ஓக.7

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு பகுதிகள் மீது நேற்றிரவு 7.15 மணியளவில் நடத்தப்பட்ட அகோர ஷெல் வீச்சுக்கு இலக்காகி 15 தமிழர்கள் பலியாகினர். 20 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

உப்பூறல் மற்றும் நல்லூர் பகுதிகளை இலக்கு ... தினர் என்றும் -

இதில் 15 அப்பாவி தமிழ் பொதுமக்கள் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் - இணையத் தளச் செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலோலி மேற்கில் சனியிரவு குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

வடமராட்சி,ஓக.6

வடமராட்சி புலோலி மேற்கு, பண்டாரி அம்மன் கோயிலடியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 5 பிள்ளைக ளின் தந்தையான ஆறுமுகம் உதயசங்கர் (வயது 42) என்பவரே சுட்டுக்கொல்லப்பட் டவராவார்.

பருத்தித்துறை நகரசபையில் சாரதியாகப் பணியாற்றும் இவர் சாளம்பை வீதியூடாக மோட்டார் சைக்கிளில் கடைக்குச் சென்று கொண்டிருந்தபோதே சுட்டுக்கொல்லப்பட் டுள்ளார்.

இவரது கொலை தொடர்பாக மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகள் என்பன நேற்றுப் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றன. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவி னர்களிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் உத்தரவு பிறப்பித் தார்.

(எ-70-15-173-202)

# பேராசிரியர் குணானந்தம் காலமானார்

நரம்பு நோயியல் சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர் விசாகசுந்தரம் குணானந்தம் (வயது 60) நேற்று லண்டனில் காலமானார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகி யவற்றில் சிறப்பான பணிகளாற்றிய பேரா சிரியர் குணானந்தம் கிழக்கு பல்கலைக்கழ கத்தில் மருத்துவபீடம் நிறுவுவதில் கணிச மான பங்களிப்பை வழங்கியவர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்பை மேற்கொண்டிருந்தார். தொடர்ந்து லண்ட னில் நரம்பு நோயியல் தொடர்பான உயர் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மருத்து பீடத்தில் இணைந்து கொண்ட பேராசிரியர் குணானந்தம் மருத்துவ பீட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தடையின்றித் தொடர்வதற்கு தன்னாலியன்ற பணிகளை ஆற்றினார். இதனால் இவர் மருத் துவ உலகினால் நன்கு மதிக்கப்பட்டார்.

பேராசிரியர் குணானந்தத்தின் ஏற்பாட் டில் ''புத்தாயிரம் புதுவெள்ளம்'' என்ற பிர மாண்டமான கலைநிகழ்வு ஒன்று பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தப்பட் டது. அதில் தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்கள் அனைத்தும் சிறப்பான ஒழுங் கமைப்பில் மேடையேற்றப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (எ)

# இனி எந்தப் படை நடவடிக்கையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட சந்திப்பில் கலந்துரையா டப்பட்ட விடயங்களைத் தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு விளக்கினார்.

அவர் அளித்த செவ்வி வருமாறு:-

*கேள்வி:-* இன்றைய சந்திப்பு தொடர்பாக?

பதில் :- இன்று நோர்வே சிறப்புத் தூது வர் அடங்கிய தூதுக் குழுவிடம் சிறிலங்கா அரசாங்கத்தின் யுத்த வெறிப்போக்கு தொடர் பாகவும் எமது மக்கள் மீதும் தேசத்தின் மீதும் சிறிலங்கா அரசு தொடுத்துள்ள யுத்த நடவடிக்கைகள் பற்றியே நாம் எடுத்து விளக் கியுள்ளோம். மிக முக்கியமான விடயங் களை வலியுறுத்தியுள்ளோம்.

அதாவது தொடர்ந்தும் சிறிலங்கா இரா ணுவம் எமது மக்கள் மீது விமான குண்டு வீச்சுக்களை, ஆட்லறி ஷெல் வீச்சுக்களை யும் யுத்த நகர்வுகளையும் மேற்கொள்ள முய லுமானால் அது பரந்தளவிலான யுத்தமாக வெடிக்கும் நிலையை உருவாக்கும். அது யுத்தநிறுத்த உடன்படிக்கையை இல்லாமல் செய்யும் என்கின்ற அபாயத்தையும் சந்திப் பில் தெளிவாக்கியுள்ளோம்.

மிகமுக்கியமாக எமது மக்களின் வாழ் விடங்களை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, எங்களுடைய மக்களை கேடயங்களாக பாவித் துக்கொண்டு, யுத்த நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவது என்பது மனிதாபிமான மற்ற - மிக மோசமான - யுத்தநிறுத்த மீறல் என்பது பற்றியும் இந்நிலைப் பாட்டுக்கும் விரைந்து சர்வதேச சமூகம் முடிவெடுக்க வேண்டும் என் பதையும் வலியுறுத்திருக்கி றோம்.

ஒரு யுத்தத்தை தவிர்ப்பதாக இருநதால் எமது மக்களை ஆக் கிரமித்து பணய கேட யங்களாக வைத்துக்கொண்டு இராணுவத் தாக்குதல்களை நடத்திக்கொண்டு இருப்ப தென்பது எமது மக்களுக்கு மிக மோசமான மனிதாபிமான அவலத்தையும் நெருக்கடி யையும் பாரியளவிலான அழிவுகளையும் ஏற் படுத்தும் நடவடிக்கையாகையால், யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளின்படி உடனடி யாக வாழ்விடங்களில் இருந்து இராணுவம் விலக்கிக்கொள்ளப்படவேண்டும்.

அதுவே இந்தச் போர் சூழலைத் தவிர்த்து அமைதி முயற் சிகளையும், பேச்சுவார்த்தைச் சூழ லையும் உருவாக்க உதவக்கூடும், இது விடயத்தில் சர்வதேச சமூகம் யுத்தத்தை நிறுத்த எவ்வளவு அக்கறைகொண்டுள்ளதோ எங்கள் வாழ்விடங்களை ஆக்கிரமித்து இருக் கின்ற ஆக்கிரமிப்புப் படைகளை எமது மக் கள் வாழ்விடங்களில் இருந்து அகற்றுவதற்கும் வலியுறுத்தவேண்டும் என்பதையும் இன்று நாம் வலியுறுத்தியுள்ளோம்.

*கேள்வி:-* அரசிடம் இருந்து ஏதாவது செய்திகள் எடுத்துவரப் பட்டனவா?

### அரசுத் தரப்பின் வேண்டுகோள்கள்

பதில் :- நோர்வே தூதுக்குழு அரசிடம் இருந்து செய்திகள் எதனையும் எடுத்துவர வில்லை. சில வேண்டுகோள்களைத்தான் எம்மிடம் விடுத்துள்ளார்கள். அதா வது திரு கோணமலை விவகாரங் கள் தொடர்பாகத் தான்.

கேள்வி:- எந்தவிதமான வேண்டுகோள் களை விடுத்தார்கள்?

பதில்:- அண்மையில் நீர்ப் பிரச்சினை யென்று சொல்லிக்கொண்டு இலங்கைப் படை கள் எங்களுடைய பகுதிகளை ஆக்கிரமிப் பதற்கு மேற்கொண்ட படை நடவடிக்கைகள், விமான குண்டுவீச்சுக்கள், ஷெல் வீச்சுகள், படைநகர்வுகள் - அதாவது பேசித் தீர்ப்பதற்கு தயாராக இருந்த நிலையிலும் யுத்த நட வடிக்கையை ஸ்ரீலங்கா படைகள் மேற் கொண்ட காரணத்தால் - நாம் சில தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந் தத்துக்கு தள்ளப்பட்டோம்.

அதாவது மூதூர்ப் பகுதிகளில இருந்து ஆட்லறி, ஷெல் வீச்சுக்கள், எமது பகுதி களுக்கான ஊடுருவல்கள் நிகழ்ந்துகொண்டு இருந்த காரணத்தால் நாம் மூதூர்ப் பகுதி மககளிடம் பாதுகாப்பான பகுதிகளுக்கு செல் லும்படி வேண்டிக்கொண்டு சிறிலங்காப் படை களின் முகாம்களை தாக்கி அழிக்கின்ற ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு படை நடவடிக்கை யைச் செய்து எங்களுடைய செயற்பாட்டை காட்டியிருக்கின்றோம்.

*கேள்வி:-* நோர்வே தரப்பிடமிருந்து விடுக் கப்பட்ட வேண்டுகோள் என்ன? அதற்கு தாங் கள் அளித்த பதில் என்ன?

பதில்:- எரிக் சொல்ஹெய்ம் அவர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை நேரடியாக நோர்வே சிறபபுத் தூதுவரும் வேண்டிக் கொண்டார். அதாவது தண்ணீர் விவகாரத்தை அதாவது நீரை உடனடியாக திறந்துவிடும்படி யும், நாம் எமது மக்கள் தொடர்பாக விடுக்கப் பட்ட கோரிக்கைகளுக்கு ஒரு கால அவகாசம் தரும்படியும் அதற்குள் தாம் பேசி அதற்கான தீர்வுகளை முன்வைப்பதாகவும் எமக்கு உறு தியளித்தார்கள். அதற்கு எமது தலைவரோடு தொடர்புகொண்டு அதற்கான இணக்கப்பாட் டைத் தெரிவித்துள்ளோம்.

### தலைவரின் நல்லெண்ண நடவடிக்கை

*கேள்வி:-* அது சாதகமான இணக்கப் பாடாக இருக்குமா?

*பதில்:-* நாங்கள் நீரைத் திறந்துவிட தயா ராக இருக்கின்றோம். எங்களுடைய மக்களு டைய பிரச்சினையை மிகவிரைவில் - மூன்று அல்லது நான்கு வாரகாலத்துக்குள் - எங் களுடைய பொறுப்பாளர்கள், மக்களுடன் கண்காணிப்புக்குழு அல்லது அனுசரணை யாளர்கள் உடனடியாகக் கலந்துரையாடி எமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற மனி தாபிமானப் பிரச்சினைகளை - இடப்பெயர்வு, பொருளாதார தடை, போக்குவரத்து தடை என்பவை நீக்கப்பட்டு எமது மக்களுக்கான நீர் விநியோகங்களும் சீர்செய்யப்படவேண் டும்.

இதற்கான காலவகாசத்தை நோர்வே தூதுக் குழுவினர் கேட்டார்கள் மூன்று அல் லது நான்கு வாரங்களுக்குள் தீர்க்கப்படும் என்பதற்கு நோர்வே தூதுக் குழு உறுதி யளித்ததன் காரணமாக எங்களுடைய தலை வர் ஒரு நல்லெண்ண அடிப்படையாக உடன டியாக நீரைத்திறந்துவிட இணங்கியிருக்கி றார்.

*கேள்வி:-* போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள் ளன. சில சில முரண்பாடுகள் ஏற்பட்டு பிரச் -சினைகள் இருக்கின்றன. அது தொடர்பாக இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்டதா?

*பதில்:-* இவ்விடயம் தொடர்பாகவும் குறிப் பிடப்பட்டது. போர் நிறுத்த உடன்பாடு 100 வீதம் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப் படுத்த வேண்டும். கண்காணிப்புப்பணி 100வீதம் நடைமுறைப்படுத்தவேண்டும். இதனை விடுத்து அரச படைகள் விமான குண்டுவீச்சுகளை யும், ஆட்லறி குண்டு வீச்சுகளையும், படை யெடுப்புகளையும் வலிந்து முன்னேடுப்பார்க ளேயானால், அதனை ஒரு மட்டுப்படுத்தப் பட்ட நடவடிக்கையாக கருதமாட்டோம். ஒட்டு மொத்தமாக ஒரு யுத்த நடவடிக்கையாக கருதி ஒரு பரந்தளவிலான நடவடிக்கை களை நாங்களும் எடுக்க நிர்ப்பந்திக்கப் படுவோம் என்பதை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

*கேள்வி:-* போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடு களைச சேர்ந்த பிரதிநிதிகள் வெளியேற வேண்டும் என்று தாங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தீர்கள். அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. போர்நிறுத்த கண் காணிப்பு குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடங் களை நிரப்புவது பற்றி இன்றைய சந்திப்பில் கருத்துகள் பரிமாறப்பட்டனவா?

*பதில்:-* தவறான சொற் பிரயோகம் பிர யோகிக்கப்படுகிறது. போர்நிறுத்த கண் காணிப்பு குழு பிரதிநிதிகள் வெளியேற வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை முன் வைத்ததில்லை. வெளியேறும நிர்ப்பந்தத்தை சிறிலங்கா அரசாங்கம் உருவாக்கியது. ஏனெ னில் சமாதான முயற்சிகளிலும், அமைதி செயற்பாடுகளிலும், கண்காணிப்பு குழுவின் செயற்பாடுகளிலும் ஐரோப்பிய ஒன்றியத் தைச் சேர்ந்த மூன்று நாடுகளின் பிரதிநிதி கள் காத்திரமான பங்கை வகிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். தடை அறி விப்பை செய்யும்படி தூண்டி அழுத்தங்களை பிரயோகித்து நிலைமைகளை மோசமாக்கி யது சிறிலங்கா அரசாங்கம்.

இது புலிகள் எடுத்த நிலைப்பாடு அல்ல. சிறிலங்கா அரசாங்கத்தால் உருவாக்கப் பட்ட சூழல். இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றி யத்தைச் சேர்ந்த மூன்று நாடுகள் பக்கச்சார் பின்மை, நடுநிலைமை, சமதரப்பு என்ற விட யங்கள் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியதன் காரணமாக இயல்பாக போர் நிறுத்த கண்காணிப்பு பணியில் இருந்து வெளி யேறவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுக் காரர்களும் விளங்கிக் கொண்டுள்ளார்கள். இது விடயம் தொடர்பாக சுவீடன் சிறப்புத் தூதுவரிடம் கலந்துரையாடி இருக்கின்றோம். ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென அரசாங்கம் வேண்டு கோள் விடுத்த காலத்திலேயே எங்களுடைய நிலைப்பாட்டை சர்வதேச நாடுகளிலும், பிரதிநிதிகளிடமும், ஊடகங்களிலும் தெளிவு படுத்தி இருக்கின்றோம்.

தற்போது வந்து புலிகள் வெளியேறச் சொல்கிறார்கள் என்று கூறுவது தவறான சொற்பதம். அதாவது, ஐரோப்பிய அறிவிப்பு வந்த பின்னர் நோர்வே கேட்டுக்கொண்ட தன் அடிப்படையில் செப்டெம்பர் 1 வரை யான காலவகாசத்தைக் கொடுத்திருக்கிறோம். இக்காலவகாசத்துக்குள் ஒரு மாற்றத்தைச் செய்யவேண்டும். அந்தந்த நாடுகள் சாதக மான முடிவுகளை எடுத்து இருக்கின்றன. முத லாம் திகதிக்குள் மாற்றங்களைச் செய்வார் கள் நோர்வே, ஐஸ்லாந்து போன்ற நாடு களின் பிரதிநிதிகள் அதிகரிக்கப்பட்டு யுத்த நிறுத்த உடன்பாட்டை - கண்காணிக்கும் பணியை வெளிப்படுத்திக்கொள்வார்கள் என்று தான் நினைக்கிறேன்.

*கேள்வி:-* இதுவரை வெளியான செய்தி களின்படி அரசாங்க மும்சரி, நீங்களும்சரி மாவிலாறு தொடக்கம் மூதூர் வரையான பிரதேசங்களில் மனிதாபிமான அடிப்படை யில் படை நடவடிக்கைகளை முன்னெடுத் ததாக கூறப்பட்டது. ஆனால், அங்கு இடம் பெற்றது கடுமையான போர். மூதூரில் நடந் தது என்ன?

*பதில்:-* அதாவது மனிதாபிமானத்தைக் காட்டி ஒரு போரைத் திணித்தார்கள். தண் ணர் விவகாரத்தை உண்மையிலேயே அடுத்த நாள் பேசித் தீர்க்கக் கூடியவகையில் கண் காணிப்புக்குழு விரைந்து செயற்பட்டுக் கொண் டிருந்தது. எங்களுடைய மக்கள் பிரதிநிதி கள், பொறுப்பாளர்கள் கலந்துரையாடி அடுத்த நாளே தண்ணீர் 'திறந்துவிடப்பட்டிருக்கும். தண்ணீர் விவகாரத்தை ஒரு காரணமாக வைத் துக்கொண்டு ஒரு படை நடவடிக்கைதான் அரசுக்கு நோக்கமாக இருந்தது. ஒரு படை நடவடிக்கையைச் செய்து எங்களுக்கு ஒரு பெரிய நெருக்கடியை ஏற்படுத்துவதுதான் அரசின் நோக்கமாக இருந்தது. ஒரு யுத்த சூழ்நிலையை உருவாக்கி, அதனால் ஏற்பட்ட பின்னடைவுகள் அரசு மாற்று நிலைப்பாட்டை எடுப்பதற்குத் தள்ளியது என்பதுதான் எங்க ளுடைய கருத்து.

இந்நிலையில் மனிதாபிமான நிலையைக் காட்டி யுத்தத்தை எப்படித் திணித்தார்களோ அதே போன்று நாமும் ஒரு தற்காப்பு யுத் தத்தை எதிர்கொள்ளவேண்டி வந்ததால் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடி தமிழ் மக்கள் மத்தியிலும், முஸ்லிம் மக்கள் மத்தி யிலும் ஏற்படுத்தப்பட்டது. ஏற்பட்ட பின்னடை வுகள் காரணமாக இலங்கை அரசாங்கம் படை நடவடிக்கைகளில் நம்பிக்கை இழந்து தான் அனுசரணையாளர்களை இங்கு அனுப்பி யிருக்கிறது. எமது தலைமைப்பீடம் ஏற்கனவே எடுத்த நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி எமது இணக்கப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம்.

*கேள்வி:-* மாவிலாறு கதவுகளை திறக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டது. அரசாங்கத் துக்கு அழுத்தத்தைக்கொடுக்க வேண்டும் என்ற வகையில் நீங்கள் ஒரு நடவடிக்கை மேற்கொண்டீர்கள். நீங்கள் எடுத்த நட வடிக்கை முடிவிற்கு வந்துள்ளது. எந்தள விற்கு உங்களுடைய நோக்கம் நிறைவேறி யுள்ளது?

*பதில்:-* மூதூர் பிரதேசத்தை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. இப்பிரதேசத் தில் செறிவாக முஸ்லிம் மக்கள் வாழ்கின் றார்கள். இப்பிரதேசங்களில் நிலை கொண் டபடி இராணுவம் மக்கள் குடியிருப்புக்கள் மீது ஷெல் தாக்குதல்களையும், படைநகர்வு களையும் நீர் விநியோகப் பகுதிகளுக்கு நகர்த்துவதற்குகென செயற்பட்டுக்கொண்டி ருந்தது. எமக்கும் எந்தவித மாற்று வழியில் லாத நிலையில்தான் மூதூர் மீதான ஒரு நடவடிக்கையை எடுத்தோம். இது கூட முன் னறிவித்தலைக் கொடுத்து தயவுசெய்து இரா ணுவ முகாம்களுக்கு அருகில் இருக்கவேண் டாம். தற்காலிகமாக வெளியேறி எமது நட வடிக்கைக்கு உதவும்படி வேண்டித்தான் எமது நடவடிக்கையை மேற்கொண்டோம்.

இலங்கைப் படைகள் என்ன செய்தன வென்றால் மிக வேண்டுமென்றே மக்களுக்கு மிகப்பெரிய மனித அவலத்தை ஏற்படுத்தும் நிலைக்கு தள்ளினார்கள். - இராணுவமே மக் கள் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தி விட்டு புலிகள் மீது அப்பழியை சுமத்த முற் பட்டார்கள் - புலிகள் மீது பழியைச் சுமத்து கின்ற செயற்பாட்டை சிறிலங்கா படைகள் மேற்கொண்டன. இந்நிலையில்தான் எமது படைகளை பழைய நிலைகளுக்கு திரும் பும்படி எமது தலைமைப்பீடம் உத்தரவிட்ட தற்கு அமைய எமது படைகள் பழைய நிலை களுக்குத் திரும்பியுள்ளன. மனித அவ லத்தை ஏற்படுத்துவதில் பெரும் பொறுப்பு அரசையும், படைகளையும் சாரும்.

*கேள்வி:-* மூதூர் தாக்குதல் களின் பின் னர் பெருமளவான முஸ்லிம் இளைஞர்களைக் காணவில்லையென அரசு குற்றம் சுமத்தி வருகிறதே?

*பதில்:-* முற்றுமுழுதான பொய்க் குற்றச் சாட்டு. ஒரு படைநடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டு இருக்கும் போது முஸ்லிம் மக்கள் பாதுகாப்பாக சில பாதைகள் ஊடாக வெளி யேறுவதற்கு வசதிகளை நாம் செய்து கொடுத்து, வெளியேறிக்கொண்டு இருந்தார்கள். இந் நேரத்தில் கருணா குழுவைச் சேர்ந்தவர் களும், இராணுவத்தினருடைய ஊடுருவல் அணியினரும் வந்து நுழைந்தபோதுதான் எமது போராளிகள் அழைத்து விசாரித்துக் கொண்டு இருந்தபோது குண்டுவீச்சு விமா னங்கள் அப்பகுதியைத் தாக்கியதால் போரா ளிகள் வீரச்சாவடைந்திருக்கின்றார்கள். விசா ரிக்கப்பட்டுக் கொண்டு இருந்தவர்களும் சாவ டைந்திருக்கின்றார்கள்.

இத்தாக்குதல் இடம்பெற்ற போது ஒரு வரும் அவ்விடத்தில் உயிர் தப்பவில்லை. இதை வைத்துக்கொண்டுதான் முஸ்லிம் இளை ஞர்களை கடத்தியதாக பொய்யான பரப் புரையை பரப்பிக்கொண்டு இருக்கின்றார்கள். இதை முற்றுமுழுதாக மறுக்கிறோம். முஸ் லிம் இளைஞர்களை கடத்தவேண்டிய தேவை எமக்கு இல்லை. எமது நடவடிக்கையென்பது ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரானதே. ஆக்கிரமிப்பு படைகளை இலக்கு வைத்தே தாக்குதல்கள் இடம்பெற்றன. (ஐ)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
0212223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# யுத்தப் பிரகடனம் எப்போதும் வரலாம்

கிழக்கில் கனன்ற பேராயுதங்கள் நேற்று முன்தினம் ஒரு நாள் தற்காலிகமாக அமைதி அடைந்திருந்தன. அந்த ஒரு நாள் அமானுஷ்ய அமைதி எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்ற சந்தேகம் நீடித்திருக்க, நேற்று மாலையே அவை மீண்டும் கனலத் தொடங்கிவிட்டன.

முழு அளவிலான உக்கிரச் சமர் எங்கு, எப்போது, எவ்வாறு, எந்த வடிவத்தில் ஆரம்பிக்கும் என்று தெரியாத அந்தர நிலையே நீடிக்கின்றது.

மாவிலாறில் மூடப்பட்ட அணைக்கட்டைத் திறந்து, கால்வாயில் நீரோட்டத்துக்கு அனுமதிக்க நிபந்தனைகளுடன் புலிகள் நேற்றுக் காலை இணக்கம் தெரிவித்திருந்தனர்.

அப்பிரதேசத்தில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் ஆதங்கங்ளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் அடுத்த மூன்று வாரங்களுக்குள் நிறைவேற்றப்படும் என்று நோர்வே அனுசரணைத் தரப்பு பொறுப்பு நின்று உறுதியளித்ததன் பேரிலும் -

நோர்வேயே நடுவில் நின்று இந்த விடயத்தைக் கையாண்டு வற்புறுத்தியதன் காரணமாக நோர்வே அனுசரணைத் தரப்புக்கு மதிப்பளித்தும் -

அணைக்கட்டு நீரைத் திறந்து விடப் புலிகள் பெருமனது பண்ணி, இணங்கியிருந்தனர்.

ஆனால் -

'வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழியை உடைத்த கதையாக' மாவிலாறு தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு வரும் சமயத்தில் மீண்டும் இணக்க முடிவுக்கான வாய்ப்பைப் போட்டுடைத்திருக்கின்றது இலங்கை அரசுத் தலைமை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அனுசரணைப் பணி வழங்கும் நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்ஸன் போவர் தாமே நேரடியாகக் கிளிநொச்சியில் நின்று விடயங்களைக் கையாள -

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவரும் மற்றும் திருகோணமலைப் பொறுப்பாளரும் நேரடியாக மாவிலாறு அணைக் கட்டு வரை சென்று அதைத் திறந்து விட முயற்சிக்க -

அச்சமயத்தில் அகோர ஷெல், பீரங்கித் தாக்குதல்களை நடத்தி விடயத்தை ஒரேயடியாகக் குழப்பியடித்திருக்கின்றது அரசுத் தரப்பு.

இந்த விவகாரத்தில் அரசுத் தலைமை நடந்துகொண்டிருக்கும் விதத்தைப் பார்க்கும்போது, சிங்களத் தலைமைக்கும், தமிழர் தரப்புக்கும் இடையில் நல்லிணக்கமும், சமரசமும், புரிந்துணர்வும் ஏற்படு வதற்கான வாய்ப்புக்கு - புறச்சூழலுக்கு - நிரந்தரமாகவே ஆப்பு வைத்தாகிவிட்டது என்றே தோன்றுகின்றது.

தன்னுடைய சிவில் அதிகாரி ஒருவரை சம்பூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அனுப்பி, அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுடன் உரையாடி, அவர்களின் அன்றாட, அத்தியாவசிய, மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றைத் தீர்த்து வைக்க உரிய நடவடிக்கை இன்ன காலக்கெடுவுக்குள் நிறைவேற்றப்படும் என உறுதியளித்து, அதன் மூலம் மாவிலாற்று நீரைத் திறந்து விட வைத்திருக்கலாம். 24 மணி நேரத்தில் முடிக்கக்கூடிய இலகுவான பணி அது. சம்பந்தப்பட்ட அரசுத் தலைவர்களுக்கு உரிய முறையில் தெளிவாக விளங்கப்படுத்தப்பட்ட விடயமும் கூட.

ஆனால், அந்த ஆலோசனைகளைப் புறக்கணித்து, இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளை அச்சுறுத்தி, கால்வாய்க் கதவுகளைப் பலவந்தமாகத் திறக்க வைக்கின்றோம் என்ற மமதையோடு நடவடிக்கைகளை எடுத்து, பெரும் உயிர், உடைமைச் சேதங்கள், எண்ணுக் கணக்கற்ற நிதி விரயம் போன்றவற்றுக்கு வழிகோலிய இராணுவவாதப் போக்கினர் இன்னமும் தமது தீவிரப் போக்கு அதிகாரத் தொனியில் இருந்து மீளவேயில்லை என்பதையே இப்போதைய நிலைமை எடுத்துக்காட்டுகின்றது.

சிவில் அதிகாரிகள் மூலம் தீர்த்து வைக்கவேண்டிய பிரச்சினையை - பிணக்கை - இராணுவ ரீதியாகக் கையாண்டதால் தம்மையும், தமது படைகளையும், தம்நாட்டையும் பெரும் தீங்கான நிலைக்குத் தள்ளிய இத்தலைவர்கள், இப்போது இவ்விடயத்தை மேலும் சிக்கலாக்கியிருக்கின்றனர்.

மாவிலாறு சிக்கலைத் தீர்க்க கையாளும் அதே இராணுவ வெறிப் போக்கில் - அதிகார மமதைச் செருக்கில் - இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அமைதி நடவடிக்கைகளையும் அரசுத் தலைவர்கள் கையாளுவதுதான் சமாதான எத்தனங்கள் இத்தகைய மோசமான நிலைமையை அடைந்தமைக்குப் பிரதான காரணம் என்பது கண்கூடு.

தொடர்ந்தும், மட்டுப்படுத்தப்பட்ட இராணு நடவடிக்கைகள் என்ற சாட்டில் தமிழர் தாயகத்தின் மீது விமானக் குண்டுவீச்சுகள், ஷெல் - பீரங்கித் தாக்குதல்கள், படை நகர்வுகள் போன்ற வலிந்து தாக்கும் நடவடிக்கைகளை அரசுத் தலைமை மேற்கொள்ள முயற்சித்தால் அது யுத்த நிறுத்தத்தை முற்றாக முறித்துக்கொண்டு, முழுப் போர்ப் பிரகடனம் செய்யயும் நடவடிக்கையாகவே கருதப்படும் என்ற எச்சரிக்கையையும் நோர்வே அனுசரணைத் தரப்பு மூலம் அரசுக்குப் புலிகள் தெரியப்படுத்தியிருக்கின்றனர். அந்தச் சமயத்தில்தான் மாவிலாறு விவகாரத்தை சுமுகமாகத் தீர்த்து வைக்கக் கிடைத்த சந்தர்ப்பதைக் குழப்பி நிலைமையை மோசமடைய வைத்திருக்கிறது அரச தரப்பு.

தென்னிலங்கையில் பௌத்த - சிங்களப் பேரினவாதத்திலும், இராணுவத் தீவிரப் போக்கிலும் ஊறித்திளைத்த சிங்களத் தலைமைகளுக்கு, அவை இனிமேல் முன்னெடுக்கக்கூடிய இராணுவ நடவடிக்கை யுத்தப் பிரகடனமாகவே கருதப்படும் என்ற புலிகளின் எச்சரிக்கை நாரசமாய்க் காதில் விழுந்திருக்கும் என்பது நிச்சயம்.

ஆனால், இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது - தனது பேரினவாத சகபாடிகளைத் திருப்திப்படுத்துவதற்காக - தென்னிலங்கை அரசுத் தலைமை இனிமேலும் இராணுவ முனைப்புடன் செயற்பட எத்தனிக்குமானால் பேராயுதங்கள் மீண்டும் கனலுவதும், முழு அளவிலான போர் வெடிப்பதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# இன மோதலுக்கும் அனர்த்த முகாமைத்துவத்துக்கும் உள்ள வேறுபாடு தெரியாத இலங்கை அரசாங்கம்!

## 'இம்டார்' சர்வதேச அமைப்பு கண்டனம்

ஜெனீவா, ஓக.7

இன முரண்பாடு என்பது அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கையல்ல என்பதை இலங்கை அரசாங்கம் விளங்கிக்கொள்ளாதிருக்கிறது என்று ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்ட எல்லாவிதமான பாகுபாடுகள் இனக்குரோதங்களுக்கெதிரான சர்வதேச அமைப்பு (இம்டார்) கண்டித்திருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயரவேண்டிஏற்பட்ட வன்முறைகள் விரிவடைவது குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம். யுத்தத்திற்கும் சுனாமிக்குப் பிறகான இடப்பெயர்வுகளுக்கும் பணம் தேவைப்படுகின்றது. இந்த யுத்தத்தை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கும் போதிய பண ஆதாரமில்லை.

ஆழிப்பேரலையால் பெருமளவில் பாதிக்கப்பட்ட மக்களே இப்போதும் இந்த மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்தப் பாதிப்பின் தாக்கத்தில் இருந்து மீண்டும் மீளவும் தமது வாழ்வியலைச் சீரமைத்துக்கொள்ளவும் இந்த மக்கள் முயன்றுவந்தார்கள். எனவே, இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மோதலைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். கடந்த 3ஆம் திகதி ஊடகவியலாளரிடம் பேசும்போது அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல பயன்படுத்தியுள்ள சொற்பிரயோகம் கவலை தருவதாய் இருந்தது. அவரைப் பொறுத்தவரை இந்த மோதல் ஓர் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கையாக இருக்கலாம். இந்தக் கருத்து கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. இவ்வாறான வன்செயலை எங்ஙனம் அந்த முறையில் வர்ணிக்கலாம். துரதிர்ஷ்டவசமாக இனமோதலுக்கும் அனர்த்த முகாமைத்துவத்துக்கும் இலங்கை அரசுக்கு வித்தியாசம் தெரியவில்லை - என்று அறிக்கையில் அந்த அமைப்பு கூறியுள்ளது.

மாவிலாறு மூடப்பட்டதனால் கிராமவாசிகளுக்கு ஏற்பட்ட கஷ்ரங்கள் குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம். அதேசமயம் மோதல் நிகழும் பகுதிகளின் கரைகளிலும் ஏனைய இடங்களிலும் வாழும் தமிழ் கிராமவாசிகளுக்கு உலர்உணவுகள் மற்றும் உதவிகள் கிடைக்காமையே இதற்குக் காரணம் என்று அறிகின்றோம்.

தண்ணீர் சம்பந்தமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வன்முறை தவிர்ந்த பேச்சுவார்த்தையே சிறந்த வழியாகும்.

இலங்கை நாட்டில் மேலும் அதிக அநாதைகளையும் விதைவைகளையும் உருவாக்குகிறார்கள் என்பதை இத்தரப்புகள் உணர வேண்டும்.

எல்லாதவித மோதல்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

- இவ்வாறு அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

(ப)

# இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கி அமைதியை முன்னேற்றவேண்டும்

## போவரிடம் கொடுத்த மகஜரில் மக்கள் குழு

யாழ்ப்பாணம்,ஓக.7

வடக்கு - கிழக்கில் முழு அளவிலான இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதன் மூலம் அமைதியை முன்னேற்றுவதற்கான சாதக சூழ் நிலையை உருவாக்க வேண்டும் என்று சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த நோர்வேயின் விசேட அமைதித் தூதுவர் ஹென்சன் போவரிடம் கையளித்த மகஜரில் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்துக்கான புதிய பாரிய திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு முன்னர், பிரதேச மக்களின் வாழ்வியல் சீரமைக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியுள்ள அந்த அமைப்பு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஆறாவது சுற்று அமைதிப் பேச்சுகளில் எட்டப்பெற்ற தீர்மானங்களும் கடைசியாக ஜெனீவாப் பேச்சுக்களின் போது எட்டப்பட்ட முடிவுகளும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

ஆயுத மோதல்கள் தவிர்க்கப் பட்டு சாத்வீகக் கோட்பாடுகளின் மீதும் அரசியல் மற்றும் சமூக வேறு பாடுகளையப்பட வேண்டும். இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் மதிப் பதாய் இருந்தால், ஒன்றாக அமர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதனால் வேறுபாடுகள் ஒரு பிரச்சினையாக இருக்க மாட்டாது. மாவிலாறு தண்ணீர்ப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்குப் பகைமைப் போக்கில் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுவதை இலங்கை அரசு கைவிடவேண்டும்.

மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடச் செய்வதில் போவர் வெற்றி பெறுவார் என்றும் அக் குழு நம்பிக்கை தெரிவித் துள்ளது.

(ப)

# வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் தொன்மையான கிணறு கண்டுபிடிப்பு

தென்மராட்சி,ஓக.7

வரணியிலுள்ள இடைக்குறிச்சியில் தொன்மையான கிணறு ஒன்று கண்டுபிடிக்ககப்பட்டுள்ளது.

இது ஒல்லாந்தர், டச்சுக்காரர் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

சுமார் 3 ½ அடி விட்டமும் 15 அடி ஆழமுமுள்ள இக்கிணறு சிறந்த நீரூற்றுடையதாகக் காணப்பட்டது.

இக்கிணற்றின் கட்டுமான சுவர் எந்தவிதத்திலும் உடைக்கமுடியாத அளவுக்கு உறுதியான கலவையால் அமைக்கப்பட்டிருந்தது.

கிணற்றை உடைத்து அப்புறப்படுத்த காணி உரிமையாளர் மேற்கொண்ட முயற்சி பயனளிக்காத தால் அக்கிணற்றை அப்படியே விட்டு கிணற்றைச் சுற்றி புதிய கிணற்றை அமைத்துள்ளனர்.

மேற்படி இடத்தைச் சேர்ந்த வீ. கந்தையா என்பவரது காணியிலேயே பழங்காலக் கிணறு தென்பட்டது. பெரும் எண்ணிக்கையானவர்கள் அக் கிணற்றைப் பார்வையிடுகின்றனர்.

(202-122)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளுடன் நோர்வே விசேட தூதுவர் கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஓக.7

கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் வருகைதந்த நோர்வேத் தூதர் ஹன்சன் போவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது, மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள நோர்வே அரசு கடந்த காலங்களில் வழங்கிய ஒத்துழைப்புப் போன்று இனி வரும் காலங்களில் இன்னும் மேலான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் நோர்வே விசேட தூதரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

'மூதூரில் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்களால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரே உடனடி உதவிகளைச் செய்தனர்; செய்துவருகின்றனர்.

இந்நிலையில் எமக்கு வழங்கப்படும் உதவிகள் நிறுதப்படுமானால் அந்த மக்களுக்கான உதவிகளை எம்மால் பூரணமாக வழங்கமுடியாத நிலை ஏற்படும்' என்று அவர்கள் தூதருக்கு சுட்டிக்காட்டினர்.

அத்துடன், புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களும் ஏனைய நிறுவனப் பணியாளர்களும் தாக்கப்படுதல் கைது செய்யப்படுதல் தொடர்கின்றன என்றும் - இதன் காரணமாகப் பணிகளை உரியமுறையில் மேற்கொள்ளமுடியாதுள்ள தாகவும் - விசேடதூதரிடம் தெரிவிக்கப்பட்டது.

(1-203)

## உதயவாக்கு

சிந்தித்துப் பார்ப்பதனால் மட்டும் சிறந்த எண்ணங்கள் உதித்து விடுவதில்லை. மனம் மட்டும் ஒழுங்காயிருந்தால் போதும் நல்ல எண்ணங்கள் தாமாகவே உதித்துவிடும். - கதே

## நாளை

ஆடி 23
செவ்வாய்க்கிழமை
08.08.2006
திதி : சதுர்த்தசி
முன்னிரவு : 07.33
நட்சத்திரம் : உத்தராடம்
முன்னிரவு : 08.17
சுபநேரம் : 10.34 - 12.04
ராகுகாலம் : 03.04 - 04.34

# சாதாரணதரப் பரீட்சைகளை இரு கட்டங்களாக நடத்தத் திட்டம்

## கல்வி அமைச்சு ஆராய்கிறது

அச்சுவேலி,ஓக.7

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை அமைப்பு முறையில் மாற்றம் செய்து தரம் 10 வகுப்பின் இறுதியில் நான்கு பாடங்களுக்கும் தரம் 11 வகுப்பின் இறுதியில் 6 பாடங்களுக்கும் பரீட்சை நடத்துவது பற்றி கல்வி அமைச்சு உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக் குத் தற்பொழுது ஒரே தடவையில் பத்துப் பாடங் களுக்கும் மாணவர்கள் தோற்றவேண்டும். ஒரே தடவையில் 10 பாடங்களுக்கும் தோற்று வதன் மூலம் மாணவர்கள் பெரும் பாடச் சுமைக்கு உள்ளாவதைக் கருத்திற்கொண்டே இரண்டு கட்டங்களாகப் பரீட்சையை நடத்து வது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது.

தரம் 10இல் நான்கு பாடங் களுக்கும் தரம் 11இல் இறுதியாக 6 பாடங்களுக்கும் பரீட்சை நடத்தப்பட் டாலும் தரம் 11இன் இறுதியில் நடத் தப்படும் பரீட்சையின் பின்னரே பரீட் சைப் பெறுபேறும் அதனை உறுதிப் படுத்துவதற்கான சான்றிதழும் வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

தற்பொழுது பிரதான பாடங்கள் என்றவகையில் எட்டுப் பாடங்களுக்கும் விருப்பத்திற்குரிய பாடங்கள் என்ற வகையில் இரண்டு பாடங்களுக்கும் மாணவர்கள் ஒரே தடவையில் தோற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(1-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலப்பொருள்களுக்கான தடங்கலைக் காரணம் காட்டி புனரமைப்புப் பணிகளை இடைநிறுத்த வேண்டாம்

## முல்லைத்தீவு அரச அதிபர் வேண்டுகோள்

விசுவமடு,ஓக.7

மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு தடங்கல் ஏற்படுகின்றது என்று காரணம் காட்டிப் புனரமைப்புப் பணிகளைத் தாமதிக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மாவட்ட நிலைமை, புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அரச அதிபர் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அத்தியாவசிய பொருள்கள் மீதான அரசின் தடையால் மாவட்டத்தின் அபிவிருத்தி, புனரமைப்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சிமெந்து, கம்பி மற்றும் எரிபொருள்கள் மீது ஏற்படுத்தப்பட்ட அரசின் கட்டுப்பாடுகளை யாரும் காரணம் காட்டி தாங்கள் பொறுப்பெடுத்துக் கொண்ட புனரமைப்பு நிர்மாணப் பணிகளை தாமதிக்க வேண்டாம்.

நிறுவனங்கள் தமக்கு தேவையான சிமெந்து மற்றும் கம்பிகள் தொடர்பான ஆவண விவரங்களுடன் மாவட்ட செயலகத்துடன் தொடர்புகொள்ளவும். அதற்கான நடவடிக்கைகளினை நாங்கள் விரைவாக மேற்கொள்வோம்.

காரணங்களைக் காட்டிக்கொண்டிருப்பதிலும் பார்க்க முயற்சி எடுப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். மாவட்டத்தில் புனரமைப்புப் பணிகளை நாங்கள் விரைவாக முடிக்க வேண்டும். வீணான காலதாமதங்கள் ஏற்படுகின்றது என்பது எமக்குத் தெரிகின்றது.

போராலும், ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட இந்த மாவட்ட மக்களை விரைவாக மீள் குடியேற்ற வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

திட்டங்களைப் பொறுப்பெடுத்த நிறுவனங்கள் இன்னும் அதிக முயற்சி எடுக்க வேண்டும். ஒப்பந்தகாரர்கள்பணிகளில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் - என்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியேறியவர்கள் தொடர்பாகக் கருத்துக்கூறியபோது,

சென்ற 21 ஆம் திகதி தன்னிடம் கிடைக்கப்பெற்ற விவரங்களின்படி 20 ஆயிரத்து 694பேர் பதிவுசெய்திருக்கிறார்கள். இவர்கள் தற்போது பாடசாலைகள், உறவினர் வீடுகள் மற்றும் பொதுநோக்கு மண்டபங்களிலும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு தற்காலிக வீடுகள் அமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களைக் கேட்டுள்ளோம். சில நிறுவனங்கள் குறித்த ஒரு தொகை வீடுகளை அமைக்க கொள்கையளவில் உடன்பட்டபோதிலும் அவர்களின் திட்டத்தின்படி ஒரு வீட்டுக்கு ஒதுக்கும் நிதி அந்த வீட்டைக் கட்டி முடிக்க சரிக்கு அரைவாசி போதுமானதாகவே இல்லை - என்றார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஆழிப்பேரலையால் 14 பாடசாலைகள் அழிவடைந்துள்ளன. இதனை பல நிறுவனங்கள் பொறுப்பெடுத்தன. ஆனால், தற்போது 7 பாடசாலைகளே அமைக்கப்பட்டு வருகின்றன. இதிலும் விரைவான செயற்பாடுகள் இல்லை. இதனை வலியுறுத்தி அந்த நிறுவனங்களுடன் தொடர்புகொண்டுள்ளேன் - என்றார்.

இதேவேளை - ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு மின்சாரம் வழங்கவென மஹிந்த சிந்தனையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ஜெனரேற்றர் தற்போது வவுனியாவில் உள்ளது. இதனை இங்கு கொண்டுவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு நகரில் இயங்கிகொண்டிருக்கும் மின்பிறப்பாக்கியும் பழுதடையும் நிலையில் உள்ளது - என்றும் தெரிவித்தார்.

(203-402)



*முழங்காவில் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான தினம் கொண்டாடப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். விஞ்ஞான ஆசிரியை செல்வி வி.தாரணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முழங்காவில் பிரதேச வைத்திய அதிகாரி பிறைற்ரன் உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படம்.*

*(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

## புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் புதிய கிளைகளைத் திறக்கக் கோரிக்கை

புதுக்குடியிருப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளைகளைத் திறக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

வேணாவில், கைவேலி, தேவிபுரம் ஆகிய இடங்களிலேயே புதிய கிளைகளை அமைத்துத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களது கோரிக்கையை அடுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிறிபா லேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

மக்களின் கோரிக்கை மனுக்கள் எமக்குக் கிடைத்துள்ளன. அவர்களின் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாகப் பொதுச் சபையினர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கூட்டுறவுத் திணைக்களத்தினர் ஆகியோரிடம் அனுமதி பெற்று மிக விரைவில் புதிய கிளைகளைத் திறப்பதற்கான நடவடிக்கையில் சங்கத்தினர் விரைவில் ஈடுபடுவர்.

வேணாவில், கைவேலி, தேவிபுரம் பகுதிகளில் மக்கள் செறிவு அதிகமாக உள்ளதால் இப்பகுதிகளில் கூட்டுறவுக் கிளைகள் அமைக்க வேண்டியது அவசியமாகும் - என்றார்.

(203-353)

## விஞ்ஞான வினாடிவினாப் போட்டிகளில் முல்லைத்தீவு வலயத்தில் வெற்றிபெற்றோர்

புதுக்குடியிருப்பு,ஓக.7

முல்லைத்தீவு வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடிவினாப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:-

சிவனருள்ராஜா மஞ்சுதன் (தண்ணீரூற்று இ.த.க.), சிவபாதம் ஜானுஜன் (முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி), அமிர்தநாதன் - பிரவீன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஜெயரட்னம் டர்ஸன் (இரணைப்பாலை ம.வி.), பாக்கியநாதன் மங்களச்செல்வி (உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்), பெனடிற் அமலதாஸ் அன்பரசன் (முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம்), கந்தசாமி நிதர்சன் (முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்), செல்லத்தம்பி ஜதுர்சி (முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி), இந்துநாதன் சுமிதா (முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்), மகாலிங்கம் சுஜீவனா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), பாஸ்கரன் றேகா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), சந்திரசேகரன் பவிதரன் (முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி), தர்மராசா குகப்பிரியா (விசுவமடு மகா வித்தியாலயம்), கறுப்பையா புவனகாந் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), தங்கவடிவேலு ஆர்த்தியா (முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி), நடராசா கஜந்தி (விசுவமடு மகா வித்தியாலயம்).

(203-353)

## விழிப்புணர்வுச் செயற்பாடு

கிளிநொச்சி,ஓக.7

கிளிநொச்சி செல்வாநகர் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் சிரமதானமும் அண்மையில் நடைபெற்றன. தமிழீழ சுகாதார சேவையினரும் கண்டாவளை வைத்திய அதிகாரி பிரிவினரும் இணைந்து விழிப்புணர்வுக் கருத்துக்களை மாணவர்களுக்கு வழங்கினர்.

தொடர்ந்து மாணவர்கள் சிரமதானம் செய்தனர். அத்துடன் கிளிநொச்சி வர்த்தக நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு சுற்றாடலைப் பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது. (203)

## தொழிற்பயிற்சி

பரந்தன்,ஓக.7

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கிராமத்தில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கட்டைக்காடு மாதர் சங்கத் தலைவர் வ.சு. றோணி தலைமையில் அண்மையில் இப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இப்பயிற்சி வகுப்பில் 40 பேர் பயிற்சிகள் பெற்றுவருகின்றனர். (203-352)

## வன்னிச் செய்திகள்

## ஓலைக் கொட்டகையில் தண்ணீரூற்றுச் சந்தை; மழைகாலங்களில் மக்கள் பெரும் அவதி

### விரைவில் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

முள்ளியவளை தண்ணீரூற்றுச் சந்தை புனரமைப்புச் செய்யப்படாது ஓலைக் கொட்டகையில் இயங்கி வருகின்றமையால் மழைகாலங்களில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்திபாரம் போடப்பட்ட நிலையில் அதற்கான மேலதிக வேலைகள் எதுவும் முன்னெடுக்கப்படாமல் சந்தை காணப்படுகின்றது.

கிடுகுகளால் வேயப்பட்ட மண் கொட்டகை ஒன்றிலேயே சந்தை இயங்கி வருகின்றது.

அத்துடன் அடிப்படை சுகாதார வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையிலேயே சந்தை இயங்கி வருகின்றது.

இங்கு ஒரு பொதுக் கிணறும் அமைக்கப்படாமையால் குடிதண்ணீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மழை காலங்களில் இச் சந்தைக்குச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை அடைந்து வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக மக்கள் பல தடவை உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியபோதும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கவில்லையெனவும் -

மழைகாலம் வருவதற்கு முன்னர் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து மக்கள் பாவனைக்கேற்றவகையில் சந்தை ஒன்றை அமைத்துத்தர வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

(203-353)

## நிறுத்தலளவைக் கருவிகளுக்கான முத்திரையிடும் பணி இன்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக.6

கிளிநொச்சிப் பகுதியில் பயன்பாட்டில் உள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன என்று நிதித்துறை வருவாய்ப்பகுதி நிறுத்தலளவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 30ஆம் திகதிவரை நிறுத்தலளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ். சாலை- கிளிநொச்சியில் அமைந்துள்ள நிறுத்தலளவைப் பிரிவுச் செயலகத்தில் முத்திரையிடும் பணிகள் நடைபெறவுள்ளன எனவும்-

நிறுத்தலளவைக் கருவிகளைப் பயன்படுத்துவோர் குறித்த நாளில் அவற்றுக்கான முத்திரைகளை இட்டுக்கொள்ளுமாறும்- நிறுத்தலளவைப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (203)



*வன்னிப் பகுதியில் செய்கைபண்ணப்பட்ட சிறுபோகப் பயிர்கள் கருவண்டுத் தாக்கம் காரணமாக கருகிக் காணப்படுவதையும் பயிர்களை நாசமாக்கும் கருவண்டுகளையும் படங்களில் காணலாம்.* *(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

## ஓராண்டு பூர்த்தியில் ரி.ஆர்.ரெக் நிறுவனம்

போராலும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு அல்லற்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்களுக்குத் தொழில்நுட்ப அறிவைப் புகட்டுவதற்கென ஆரம்பிக்கப்பட்ட ரி.ஆர்.ரெக் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கருதி புலம்பெயர்ந்து லண்டனில் வாழும் தமிழர்களால் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு துறைகளிலும் சேவையாற்றிவருகிறது.

இந்நிறுவனத்தில் கல்வி கற்பதற்கு மாணவர் தெரிவு இடம்பெறும்போது அவர்களது பொருளாதார நிலைமையும் கருத்திற் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்நிறுவனம் தனது அடுத்த கட்ட இலக்காக கணனித்துறையில் பட்டப்படிப்புகளை ஆரம்பிக்கவுள்ளது.

இங்கு கல்வி கற்று வெளியேறும் மாணவர்களுக்கு லண்டன் தொழில்நுட்பக் கல்லூரிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் சான்றிதழை இவர்கள் பெறுவதற்குத் தகைமையுடையவர்களாகின்றனர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க நோர்வே இருதரப்புகளுக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும்

## விசேட தூதுவரிடம் யாழ். முஸ்லிம் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.7

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்ந்து நீடிக்கவிடாமல் இரு தரப்பினரும் யுத்தநிறுத்த உடன் படிக்கையைக் கடைப்பிடித்து மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு நோர்வே அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த நோர்வேயின் விசேட பிரதிநிதி ஹான்சன் போவரிடம் யாழ். முஸ்லிம் மக்கள் பணிமனையினர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இதுவிடயமாக யாழ். முஸ்லிம் மக்கள் பணிமனையினர் கையளித்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அச்சத்துடனும் அமைதியின்றியும் வாழுகின்ற எமது முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல்வேண்டும்.

முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நஷ்ட ஈடுகளைப் பெறவும் மீள கட்டுமானத்திற்கும் தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கப்படவேண்டும்.

சமாதானப் பேச்சின்போது இடம்பெயர்ந்த முஸ்லிம்களது பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் - இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜர் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். முஸ்லிம் மக்கள் பணி மனைத் தலைவரும் காதி நீதிவானுமாகிய மௌலவி சுபியான், முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசல் மௌலவி பாஹிம், பெரிய கடை முகிங்யதீன் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி இர்பான் ஆகியோர் கலந்து கொண்டனர். (13)

## 25 மாணவர்களுக்கு சேமிப்புக்கணக்குகள்

தென்மராட்சி,ஓக.7

மீசாலை, அல்லாரை நாவலர் முன்பள்ளியில் கற்கும் 25 மாணவர்களுக்கு மக்கள் வங்கியின் 'சிசு உதான' சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகர லியோ கழகத்தினர் இந்த சிறார்களுக்கு சேமிப்பு கணக்குப் புத்தகங்களை வழங்கினர்.

முன்பள்ளி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சிவபாலனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸும் கலந்துகொண்டனர்.

(1-117)

## கைதடி கிழக்குப் பகுதி மக்களுக்கு மின்சார வசதி இன்னும் இல்லை

கைதடி கிழக்கில் ஜே/289 கிராம சேவகர் பிரிவில் கள்ளிநகர் மற்றும் இராஜபுரி ஆகிய பிரதேசங்களுக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விரு கிராமங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்றன. எனினும், குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்த ஏனைய சில பிரதேசங்களுக்கு இலங்கை மின்சார சபை மின்சாரம் வழங்கியுள்ளது என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இவ்விரு பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் மகஜர்கள் மூலமும் நேரடியாகவும் கோரிக்கை விடுத்தபோதும் இதுவரை எதுவித பலனும் கிட்டவில்லை என மக்கள் கவலை தெரிவித்தனர். (1-75)

## மந்துவில் வடக்கில் லயன்ஸ் ஏற்பாட்டில் புதனன்று பல்வேறு நலத் திட்டங்கள்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் மந்துவில் வடக்கு கிராமத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை பல்வேறு நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலவச மருத்துவ பரிசோதனை முகாம், காலங் கடந்த பிறப்பு பதிவு, இலவச திருமணப் பதிவு ஆகிய நலத்திட்டங்கள் மந்துவில் வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மருத்துவ பரிசோதனை முகாமில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், தொழுநோய், வாய்ப்புற்று, பெண் நோயியல் ஆகிய நோய்களுக்கான பரிசோதனை நடத்தப்படும்.

கண் பார்வையில் குறைபாடுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

இதுவரை சட்டபூர்வமாக திருமணப் பதிவு மேற்கொள்ளாத குடும்பங்களுக்கு அன்றைய தினம் இலவச திருமணப் பதிவுகளும் -

இதுவரை பிறப்புப் பதிவினை மேற்கொள்ளாதவர்களுக்கு காலங்கடந்த பிறப்புப் பதிவுகளும் - தென்மராட்சி பிறப்பு, விவாகப் பதிவுகாரர் க.மோகனராஜலிங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார். (1-117)

## பேச்சுப் போட்டி முடிவுகள்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவர் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

செல்வி யுனிக்கா மக்கேரியா (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), செல்வி வேனுகா தர்மலிங்கம் (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை), வி.நிரேஷ்குமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரே வெற்றி பெற்றவர்களாவர். இப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தேசிய மட்டத்திலான போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கின்றனர். (1-86)

## எய்ட்ஸ் நோய் பாதிப்புற்றோருக்கு உதவ பல நிறுவனங்கள் கொண்ட புதிய அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ். மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயால் பாதிப்படைந்தோருக்கு உதவும் நோக்குடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கிய யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தலைமையில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், யாழ். போனா வைத்தியசாலையின் பாலியல் தொற்று நோய் தடுப்பு பிரிவின் வைத்திய அதிகாரி, பாலியல் தொற்று நோய்ப் பிரிவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், யுனிசெப், சர்வதேச இடம்பெயர்ந்தோருக்கான அமைப்பு, சொன்ட், சிறுவர் பாதுகாப்பு நிதியம், போரூட், கெயார், வைற் பீகன், கிறிஸ்ரியன் எயிட், ஜே.எஸ். ஏ.சி, ஏ.ரி.எம். ஆகிய நிறுவனங் களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

இந்த அமைப்பின் மூலம் நோயாளர்களுக்கு உதவுதொகை வழங்க விரும்புபவர்கள் இலங்கை வங்கியின் மேற்றரக்கிளையில் 4194142 என்ற கணக்கில் வைப்பிலிடலாம் என்றும் -

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனையில் உள்ள அமைப்பின் பொருளாளரிடம் பணத்தைச் செலுத்தி பணத்திற்கான பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம் என்றும் -யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரும் அமைப்பின் தலைவருமான டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெறப்படும் நிதியைப் பயன்படுத்தி யாழ். மாவட்டத்தில் எய்ட்ஸ் நோய் பாதித்தவர்களுக்கு மாதாந்தம் உதவு தொகை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(1-202-51)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வேலணையிலும் புளியங்கூடலிலும் இரத்தப் பரிசோதனை நிலையங்கள்

### லயன்ஸ் கழகத்தால் அமைக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஓக.7

தீவக அரிமாக் கழகம் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் தீவகத்தில் இரு இரத்தப் பரிசோதனை நிலையங்களையும் கற்றல் நிலையம் ஒன்றையும் அமைத்து வழங்கியுள்ளது.

வேலணை செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் இரத்தப் பரிசோதனை நிலையத்தையும் புளியங்கூடல் பிரதேசத்தில் இரத்தப் பரிசோதனை நிலையத்தையும் லயன்ஸ் கழகம் அமைத்துள்ளது.

கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடியாக சின்னமடு றோ.க.த.க. பாடசாலைக்கு கற்றல் நிலையம் ஒன்றையும் அமைத்து லயன்ஸ் கழகம் வழங்கியது.

இவற்றின் ஆரம்ப நிகழ்வுகளும் மருத்துவ முகாமும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் வலயம் 1 இன் தலைவர் லயன்ஸ் பி.ஆர்.ரஞ்சன் கலந்துகொண்டார்.

வலயத் தலைவர் இரத்தப் பரிசோதனை நிலையங்களை ஆரம்பித்து வைத்தார்.

கழகத் தலைவர் லயன் கு.கங்கைவேணியன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் கழகத்தின் அனுசரணையாளர் எஸ். பிரபாகரனுக்குக் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

அன்றையதினம் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் 300 இற்கும் மேற்பட்டோர் கலந்து பயன்பெற்றனர். (202)

## கடவுச் சீட்டு விண்ணப்பங்களை தபால் நிலையங்களிலும் பெறலாம்

நல்லூர்,ஓக.7

வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்கான விண்ணப்பப் படிவங்களை அஞ்சல் அலுவலகங்களுக்கு ஊடாக வழங்குவதற்கும் விண்ணப்ப் படிவங்களை அஞ்சல் அதிபர்கள் உறுதிப்படுத்தக் கூடியதாகவும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் நவடிக்கை எடுத்துள்ளது.

தங்களது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து அஞ்சல் அலுவலகத்தில் கடவுச் சீட்டு விண்ணப்பங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் -

பொறுப்பு அஞ்சல் அதிபர்கள் கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்களை எவ்வித கட்டணமுமின்றி உறுதிப்படுத்த முடியும் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(1-111)




யாழ். முஸ்லிம் மக்களின் பணிமனையினால் சுயதொழில் முயற்சிக்காக யுவதிகளுக்கென தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சவுதி அரேபியாவில் இலங்கைக்கான தூதரகத்தில் இயங்கும் 'செம்பிறை' எனும் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்தத் தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 30 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தையல் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (முஸ்லிம் மக்கள் பணிமனையில் இடம்பெற்றது.

இதில் மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி சுபியான் தையல் இயந்திரங்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (13)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் விரைவில் பொது நிர்வாக முதுமாணி கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஓக.7

முதுமாணியில் பொதுநிர்வாக (**M.A., Public Adm.**) கற்கைநெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை இதைத் தெரிவித்தார்.

தற்போது பட்டப்படிப்புகள் பீடத்தின் ஊடாக பிரதேச திட்டமிடலில் முதுமாணி, பிரதேச அபிவிருத்தியில் முதுமாணி, குடித்தொகையில் முதுமாணி ஆகிய கற்கை நெறிகளில் 150 பேர் கல்வியைத் தொடர்கின்றனர்.

விரைவில் முதுமாணியில் பொதுநிர்வாக கற்கைநெறிக்காக விண்ணப்பம் கோரப்படும்.

பட்டதாரியான எவரும் மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

பத்துவருடம் நிர்வாகத்துறையில் அல்லது நிர்வாக சேவையில் உள்ள அலுவலர்கள் விண்ணப்பித்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பட்டப்பின் கல்வித்தகைமை உள்ளவர்கள் மட்டுமே எதிர்காலத்தில் தொழில் போட்டியில் [illegible] உயர்வுகள் பெறுவதற்கு சந்தர்ப்பம் கிட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (1-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளம் நிறைந்த வாழ்த்துகள்

ஆயர் பணியிலும், ஆன்மீக
வழிகாட்டலிலும் ஆண்டுகள் 25ஐ நிறைவு
செய்யும் எமது
பெருமதிப்பிற்கும், வணக்கத்திற்குமுரிய

**பேரருட் திரு**
**தோமஸ் சௌந்தரநாயகம்**

ஆண்டகை அவர்களை இன்னும்
பல்லாண்டு காலம் பணிசெய்ய மனமார
வாழ்த்தி இறையருள் வேண்டுகின்றோம்.



தலைவர், நெறியாளர், பணியாளர், யாழ்.மாவட்ட
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம்,
இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சி/50679) (26.11.14)

## உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு
### டோகா- கட்டார்

**Computer Hadware Engineering**
**(ஹாட்வெயர் இஞ்சினியரிங்) (Computer)**

1. T.P. ரெக்னிசன்
2. கொமினிக்கேசன் ரெக்னிசன்
3. எலக்ரீசன் போமன்
4. மேசன்
5. தச்சுவேலை
6. வெல்டர்
7. ரைல்ஸ் வேலை (மாபிள்)
8. பார ஊர்தி றைவர்
9. டீசல் மெக்கானிக்
10. அலுமினியப் பிற்றர்
11. கூலி ஆள்கள்
12. பிளம்பர்

கவர்ச்சிகரமான சம்பளம்.

**Sathees Travel Agency Commnication**
K.Sathees
Uduvil Road, Manipay,
Jaffna,Sri Lanka.
Reg.No: VSW/ FIN/BR/ 936/ 1- 2004

தொடர்புக்கு:
0773276298,
0773525742,
+9745694662.

(52840) (30.11.14.26)

## STUDY AND WORK IN LONDON

O/L (or),A/L (or) அதற்கு மேல் தகைமை கொண்டவர்களுக்கு London, Australia நாடுகளில் பட்ட மேற்படிப்பை தொடர நேரடி அனுமதி மற்றும் தேவையான சகல ஏற்பாடுகளையும் வழங்க எமது யாழ்.அலுவலகம் UCAS தனது சேவையை ஆரம்பித்திருக்கிறது.

- 2006 October Intake, Closing date (18.08.2006)
- Sponsor, IELTS arrangement
- Part time Job arrangement
- 100% Success of visa process for genuine students.
- All arrangement will be done well

To Contact...
**UCAS International U.K. & Australia**
401/1, Kasthuriar Road.,
Near Appaiya Kadai junction, Jaffna, Srilanka.
+ 94773768907, +94 777032667
(53009)(26.11.14) Time 9 a.m.-.5p.m.


## சிறார்களின் கல்விக் கண்காட்சி

தென்மராட்சி,ஓக.7

மீசாலை, அல்லாரை ஐங்கரன் முன்பள்ளி சிறார்களின் கல்விக் கண்காட்சி நேற்றுமுன்தினம் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

சிறார்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியில் பங்குபற்றிய அனைத்துச் சிறார்களுக்கும் சாவகச்சேரி நகர லியோ கழகத்தினர் பரிசில்களை வழங்கினர். (1-117)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

802 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

**07 33 47 53**

கும்பம்

**04-08-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 5320598 - 5335987

ஜக்பொட் பரிசு ரூபா.3,267,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 339,469 | 10/- | 3,394,690/- |
| 2 இலக்கங்கள் | 31,201 | 20/- | 624,020/- |
| 1 இல. + லக்கினம் | 30,781 | 30/- | 923,430/- |
| 2 இல. + லக்கினம் | 2,899 | 100/- | 289,900/- |
| 3 இலக்கங்கள் | 826 | 500/- | 413,000/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,267,200/- | - |
| மொத்தம் | | | 6,500,040/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 405,257 | | 7,523,540/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,025,250/-

தொடர் இல.4440498 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 ஆகஸ்ட் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 5323244-2-60 |
| களுத்துறை | 5326780-1-29 |
| புத்தளம் | 5322983-3-64 |
| அம்பாறை | 5323889-5-50 |
| கண்டி | 5328308-4-96 |

## ஜெனரேட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 60 KVA ஜெனரேட்டர்(English Make) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777325545.

## வெளிவந்துவிட்டது
### ஒழுக்காற்று நடைமுறைக் கையேடு

கிடைக்கும் இடம்:
யாழ்ப்பாணம்,கொழும்பு- பூபாலசிங்கம் புத்தகசாலை
வவுனியா- கவிதா புத்தசாலை, பஸ்நிலையம்.
திருகோணமலை- D.பாலகெங்காதரன், 50 வன்னியார் வீதி.

நூலாசிரியர் க.பஞ்சலிங்கம் - நல்லூர்.
தொ.பே.0773715800

## IBMS
### Computer Courses

புதிய பிரிவு ஆரம்பம்
12.08.2006 பகல் 10.00 மணி

Head Office : # 209, Manipay Road,
Vaitheeswara Junction,
Jaffna.
T.P. No. : 021 222 8232

Branches : • NMMV Road, Nelliady
• Sangaththanai,
- Chavakachcheri


## சிற்றூழியர் கடமை நேரம் மாற்றப்பட்டுள்ளது

யாழ். மாவட்ட மருத்துவமனைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்களின் சுழற்சிமுறையிலான கடமை நேரங்கள் கடந்த சனிக்கிழமை தொடக்கம் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

காலை 6, பகல் 11, இரவு 7 மணி ஆகிய நேரங்களில் ஊழியர்களின் கடமை நேரம் ஆரம்பிப்பதாகவும்- இதுவரை நாளும் காலை 6.30, முற்பகல் 10.30, மாலை 6 மணி ஆகிய நேரங்களில் கடமைகள் ஆரம்பித்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (1-117)

## வடமராட்சியில் சுயதொழில் வாய்ப்புக்கு கால்நடைகள்

வடமராட்சி,ஓக.7

வடமராட்சியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலகதரிசன நிறுவனம் ஆடு, கோழிகளை வழங்கவுள்ளது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மணல்காடு, குடத்தனை,அம்பன் ஆகிய இடங்களில் உள்ள குடும்பங்களுக்கு கால்நடை வளர்ப்புத் தொடர்பாக உலகதரிசன நிறுவனம் பயிற்சிகளை வழங்கி வருகிறது. இந்தப் பயிற்சி கடந்த மாதத்தில் மட்டும் 8 தினங்கள் நடைபெற்றுள்ளன.

இப்பயிற்சியைப் பெற்ற குடும்பங்களில் 10 குடும்பங்களுக்கு தலா 2 ஆடு வீதமும், 25 குடும்பங்களுக்கு தலா 10 நாட்டுக் கோழிகள் வீதமும் சுயதொழில் முயற்சிக்காக வழங்கவுள்ளது. (1-173)

## கோப்பாயில் மாடுகளுக்கு தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம்,ஓக.7

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது என இப் பிரிவு கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மாடுகளுக்கு தடை மருந்து ஏற்றப்படும் திகதி, இடம் பற்றிய விவரம் வருமாறு:

இன்று கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், கட்டப்பிராய் சனசமூக நிலையம்-


நாளை நீர்வேலி செம்பாட்டு பிள்ளையார் கோயில், கரந்தன் பூதராயர் கோயிலடி.

எதிர்வரும் வியாழக்கிழமை உரும்பிராய் ஞான வைரவர் கோயிலடி. உரும்பிராய் மூன்று கோயிலடி. (1-204-11)


## INTERNATIONAL SCHOOL MANIPAY
Mather's Lane Manipay
சர்வதேச பாடசாலை மானிப்பாய்

**Telephone Number 2222659/9738**

1ம் தவணை பாடசாலை ஆரம்ப திகதி 04.09.2006






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காசியாவில் ஐ.நா. வேகமாக செயற்பட வேண்டிய தருணம் இது

மேற்காசியாவில் [மத்திய கிழக்கில்] இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் யுத்தம் உண்மையில் - சில இஸ்ரேலியப் படைவீரர்களை ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகள் கடத்திச் சென்றமைக்காக - துணிவது இயற்கை என்பது ஒருபுறமிருக்க, இந்தப் புனித காரியத்தில் உயிரை விட்டால் இறைவன் தனது பூங்காவிற்குள் அவர்களை அனுமதித்து கௌரவிப்பான் என்று நம்புகிறார்கள்.


லெபனான் மீது இஸ்ரேலிய டாங்கி படைகளின் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்

அமெரிக்க ஆதரவில் முன்னெடுக்கப்பட்ட 'றோட் மாப்' என்ற தீர்வுத்திட்டத்தை அவை ஏற்றுக்கொள்ளமறுத்துள்ளன.

இந்த நிலையில்தான் ஹிஸ்புல்லாவையும் ஹமாஸ் அமைப்பையும் கூடிய வரை பலவீனமாக்குவதற்கு இஸ்ரேல் முயல்கிறது. அதனால் தான் அமெரிக்காவின் வேண்டுகோளையும் பொருட்படுத்தாமல் லெபனானில் ஹிஸ்புல்லா நிலைகளை இஸ்ரேல் கண்மூடித்தனமாகத் தாக்கி வருகின்றது. இஸ்ரேலுக்குமேற்கு நாடுகளும் உதவுவது போன்று ஈரான், சிரியா போன்று இஸ்லாமிய நாடுகள் ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்புகளுக்கு உதவுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பலஸ்தீனத்தில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஹமாஸ் அரசை ஒருவாறு சமாளிக்கலாம் என்றிருந்து இஸ்ரேலுக்கு ஹிஸ்புல்லாவின் திடீர் நடவடிக்கை ஆத்திரத்தைக் கிளறி விட்டிருக்கிறது. அதனால் லெபனான் எல்லைப்பகுதிகளில் உள்ள ஹிபுல்லா நிலைகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு லெபனானில் கண்மூடித்தனமாக இஸ்ரேல் தாக்குதல் ஆரம்பித்தது. ஆனால், லெபனானிலுள்ள ஹிஸ்புல்லாக்களின் எழுச்சியைக் குறைத்துவிட முடியவில்லை அவர்கள் இஸ்ரேல் மீது கோரமான ஏவுகணைத் தாக்குதலை நடத்திவருகிறார்கள்.

அவர்களை மீட்பதற்காக நடத்தப்படும் ஒன்று என எழுந்தமானமாகத் தோன்றலாம்.

ஆனால், இந்த இரு தரப்புக்குமிடையில் - அதாவது அரபு இனத்தவர்களுக்கும் யூத இனத்தவர்களுக்குமிடையில் சமய, அரசியல், நாடு, நிலம் மற்றும் கலை, கலாசாரத் துறைகளில் ஆழமாகப் புரையோடிப்போயிருக்கும் வெறுப்பும் கோபமும் ஒன்றையொன்று அழித்தொழிக்கும் மனப்பான்மை - நிலையும் இவை போன்றவையும்தான் அடிப்படை.

### இஸ்ரேல் என்ற நாடு

1948ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற நாடு பலஸ்தீன மண்ணில் உருவாக்கப்பட்டதிலிருந்து ஒருபோதும் அது நிம்மதியாக இருந்ததில்லை.

ஹிஸ்புல்லாவும் ஹமாஸும் இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பு நாடு என்றே கருதிவந்துள்ளன. இந்த மண்ணை விடுவிப்பது தமது புனிதமான கடமை என்பது அவர்களின் அசைக்கமுடியாத உறுதிப்பாடு.

இதனைச் சாதிப்பதற்கு எந்தவிதமான தியாகத்தையும் புரிவதற்கு அவர்கள் சித்தமாகவிருக்கிறார்கள்.

### ஹிஸ்புல்லா என்ற சொல்

ஹிஸ்புல்லா என்ற சொல் புனித குரானிலிருந்து எடுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. அதன் பொருள் இறைவனின் கட்சிக்காரர் என்பதாம். அதுபோலவே ஹமாஸ் என்ற சொல்லும் குரானிலிருந்து எடுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. எனவே, இந்த அமைப்புகள் தமக்கு வலிமையும் உயிர்ப்பும் இறைவனிடமிருந்தே கிடைப்பதாகக் கருதுகின்றனர். எனவே, தாம் புனிதமாகக் கருதும் ஒரு கொள்கைக்காக அவர்கள் உயிரையும் விடத்

2000ஆம் ஆண்டு மே மாதம் தென் லெபனானிலிருந்து இஸ்ரேலிய இராணுவத்தை ஹிஸ்புல்லா அமைப்பு வெளியேறச் செய்தது. பல வருடங்களாக அரபு நாடுகளால் செய்யமுடியாத ஒரு காரியத்தை ஹிஸ்புல்லாவினால் செய்யமுடிந்தது என்றால் அவர்களுக்கிருந்த வளங்களும் வாய்ப்புகளும் காரணமன்று. தங்கள் மார்க்கத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற உணர்வு பூர்வமான ஊக்கமும் அர்ப்பணிப்புமே என்று கருதப்படுகின்றது.

### ஆதரவுக்கு காரணம்

இந்த அமைப்புக்களுக்குத் தங்கள் மக்கள் மத்தியிலிருந்து அபரிமிதமான ஆதரவு கிடைப்பதற்கு சமய கோட்பாட்டு உறுதிப்பாடுகள் மட்டுமல்ல, சாதாரண மக்களின் நலன்களின் அவை காட்டுகின்ற அக்கறையும் முக்கிய காரணம் எனலாம் சமூகசேவை, மருத்துவமனைகள், கல்விமேம்பாடு போன்ற துறைகளில் மக்களின் தேவை அறிந்து அவை பணியாற்றுகின்றன.

இவை இப்படி இருக்க இஸ்ரேல் என்ற ஒரு நாடு பலஸ்தீன மண்ணில் இருக்கவே கூடாது- அது மண்ணிலிருந்து கழுவித் துடைக்கப்படவேண்டும் என்பது இந்த இரு அமைப்புகளின் அடிப்படைக் கொள்கையாகும். மேற்கு நாடுகளின் ஆதரவும் அனுசரணையும் இருப்பதினாலேயே இஸ்ரேல் ஊக்கம் பெறுகிறது என்பது அவர்களின் குற்றச்சாட்டு. அதனால்தான்

இருதரப்புக்குமிடையில் தற்போது எழுந்துள்ள மோதலின் அடிப்படை கைது செய்யப்பட்டுள்ள இரு தரப்பு போராளிகளையும் விடுவிக்க வேண்டும் என்பதே. இதில் ஐ.நா. இன்னும் வேகமாகச் செயற்படமுடியாமல் இருப்பது கவலைக்குரியது.

போர்க்கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக ஐ.நா. சற்று வேகமாகவும், ஆழமாகவும் பணியாற்றினால் தற்போதைய மோதலை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வாய்ப்பிருக்கின்றது.

இல்லையெனில் இருதரப்பாலுமே பொதுமக்களும் அவர்களின் சொத்துகளும் மேலும் அதிகமாக அழிவுக்குள்ளாகும் நிலை ஏற்படும்.

★★★

## கியூபா புரட்சியின் தந்தை பிடல் காஸ்ரோவின் உடல் நிலை



### பிடல் காஸ்ரோ பதவி விலகல்

உலகில் நீண்டகாலம் தலைமைப் பதவியிலிருந்து வந்த ஓர் அரசியல் தலைவரான கியூபாவின் அதிபர் பிடல் காஸ்ரோ கடந்த வாரம் தமது பதவியிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொண்டிருக்கிறார்.

## உலக வலம்

கியூபாவில் புரட்சி வெற்றிபெற்ற 1959 ஆம் ஆண்டிலிருந்து பிடல் காஸ்ரோ அதிகாரப் பதவியில் இருந்து வந்துள்ளார். உலகில் தற்பொழுது நிலைபெற்றுள்ள ஐந்து கம்யூனிஸிய நாடுகளில் கியூபாவும் ஒன்று. சீனா, வியட்னாம், லாவோஸ், வட கொரியா ஆகியவை ஆஸியாவிலுள்ள ஏனைய கம்யூனிஸ நாடுகள். அதிபர் காஸ்ரோவுக்கு ஆகஸ்ட் 13ஆம் திகதி 80 வயதாகின்றது. இதையொட்டிய கொண்டாட்டங்களை டிசெம்பர் 2ஆம் திகதி நடைபெறவிருக்கும் கியூபா புரட்சிகர இராணுவத்தின் 50 ஆவது வருடாந்தக் கொண்டாட்ட தினத்துக்கு ஒத்திவைக்கும்படி அவர் உத்தரவிட்டுள்ளார்.

### சகோதரர் அதிபராகிறார்

அறுவைச் சிகிச்சையொன்றுக்காக தமது அதிபர் பதவியையும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையும் கைவிட்டுள்ளார். தமது இளைய சகோதரர் 75 வயதான ராவுல்காஸ்ரோவிடம் இந்தப் பொறுப்புகளை காஸ்ரோ ஒப்படைத்துள்ளார்.

ராவுல் காஸ்ரோ, பிடல் காஸ்ரோவின் நம்பிக்கைக்குரிய இளைய சகோதரர் மட்டுமன்றி, அவருக்குப்பின் பதவிக்குவரவேண்டியவர் என்று சட்டப்படி விதந்துரைக்கப்பட்டுள்ளவருமாவார்.

எனவே, காஸ்ரோவால் தொடர்ந்து பதவிக்கு வரமுடியாமல் போனால் சகோதரர் ராவுல் காஸ்ரோவே பதவியில் இருப்பார் என்று சொல்லத்தேவையில்லை.

★★★

### நேட்டோ பொறுப்பேற்பு

தலிபான்களின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படும் ஆப்கானிஸ்தான் தென் பகுதியின் பாதுகாப்பை நேட்டோ படைகள் தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளன. அமெரிக்க தலைமையிலான கூட்டணிப்படைகளிடமிருந்து நேட்டோ படைகள் பொறுப்பேற்றுக்கொண்டன. நேட்டோவில் இடம்வகிக்கும் நாடுகளும் அங்கம் வகிக்காத நாடுகளுமாக 37 நாடுகளின் படைகள் இந்த நேட்டோ படைகளில் அங்கம் வகிக்கவிருக்கின்றன.

ஆப்கான் தென்பகுதியில் தலிபான்களின் செயற்பாடுகளை ஒட்ட நசுக்குவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்று கருதப்படுகின்றது. •

# வடமராட்சி கல்வி வலயமட்ட வினாடி-வினாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.7

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தமிழ்மொழி, ஆங்கிலமொழி மூல கணித பாட வினாடி-வினாப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்மொழிமூலம் வகுப்பு ரீதியாக வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

### தமிழ்மொழி

#### தரம் 6

பி.சந்தோஜன் - தேவரையாளி இந்துக் கல்லூரி, சி.சிவதர்சிகா - வட இந்துமகளிர் கல்லூரி, சு.சுதேசனா - மெடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை - சி.கார்த்திகேயன் - இமையாணன் அ.த.க. பாடசாலை.

#### தரம் 7

இ.ரம்மியா - மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, தி.கஜகரன் - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, சி.தர்மிகா - வட இந்து மகளிர் கல்லூரி, க.பிரதாப் - ஹாட்லிக் கல்லூரி, வி. ஜானுஷா - புற்றளை ம.வி., த.றொசானி - கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை, கு.சஞ்சிகா - ஞானாசிரியார் கல்லூரி.

#### தரம் 8

சி.கோவர்த்தன் - கம்பர்மலை வித்தியாலயம், க.கௌதமன் - கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி - ம.அனுத்திஜா - வல்வெட்டித்துறை இந்து த.மி.க. பாடசாலை.

#### தரம் 9

க.கமலவாசன் - கம்பர்மலை வித்தியாலயம், த.துவாரகன் - கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, செ.சர்மிலா - கரவெட்டி விக்கினேஸ்ரா கல்லூரி.

#### தரம் 10

பா.கோகுலன் - ஹாட்லிக் கல்லூரி, ச.விதுரன் - ஹாட்லிக் கல்லூரி, தெ.பிரணவன் - ஹாட்லிக் கல்லூரி, இ.செல்வபபிதா - கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி. சி.ராகுலகீதன் - ஹாட்லிக் கல்லூரி, சி.சஞ்ஜய் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, ச.கோகுல் - ஹாட்லிக் கல்லூரி.

### ஆங்கிலமொழி

ஆங்கில மொழி[illegible] பாட வினாடி - வினாப் போட்டிகளின் முடிவுகள் வகுப்பு ரீதியாக வருமாறு:-

#### தரம் 6

த.கோகுலன் - ஹாட்லிக் கல்லூரி, பி.தர்சிகா - மெடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, உ.கீர்த்தனா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

#### தரம் 7

க.கிருஷ்யாயினி - வட இந்து மகளிர் கல்லூரி, வி.அபிராமி - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. , எஸ்.கிருஷ்ண பிரதாப் - ஹாட் லிக்கல்லூரி, க.வர்ணிகா - மெடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

#### தரம் 8

த.பிரியந்தி - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, கே.செந்தூரன் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, பு.நிலுக்ஸி - மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, எஸ். சரத்பவன் - ஹாட் லிக் கல்லூரி.

#### தரம் 9

சி.அரவிந்த் - ஹாட்லிக் கல்லூரி, சி.யோகினி - மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, கே.தனிராசன் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி. (1-117)

## வடமராட்சி கிழக்குக்கு ஆறு ஆசிரியர்கள் நியமனம்

தென்மராட்சி,ஓக.7

வடமராட்சி கிழக்குப் பிரதேச பாடசாலைகளுக்கு கல்வியியல் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர்கள் ஆறுபேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் ஐந்து பேரும் ஆங்கில பாட ஆசிரியர் ஒருவருமாக ஆறு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை உள்ள போதிலும் அவற்றைப் போதிக்கப்போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாதது குறித்து பெற்றோர் கவலை தெரிவித்தனர். (1-117)

## அடையாள அட்டைகள் வந்துசேர்ந்துள்ளன

யாழ்ப்பாணம்,ஓக.7

பருத்தித்துறைப் பிரதேச செயலகம் ஊடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் ஒரு தொகுதியினருக்கான அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன. இவை அந்தந்தக் கிராம அலுவலர் ஊடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (1-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கானை செங்கற்படை மகா

# திராவிடமுகபத்திர சித்திரத் தேர் 

## இன்று (07-08-2006) திங்கட்

### செங்கற்படையானுக்கு சித்திரத்தேர்

அகத்தினால் அனைவரது முகம் தன்னை அனுபூதிக்கும் அடியார்களின் அபிலாசைகளைச் செயலாக்கும் தெய்வம் ஆனைமுகக் கடவுள்.

தடைகளை உடைத்து நம் உள்ளம் மகிழும் வண்ணம் இன்று தன்னுடைய ஆலயத்திற்கு ஓர் அற்புதமான சித்திரத்தேரினை எம்பெருமான் தோற்றுவித்துள்ளார். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலரை எம்பெருமான் தோற்றுவித்துள்ளார். துஷ்ட நிக்கிரத சிஷ்ட பரிபாலரை பக்த அனுக்கிரக காரணாதீதமான இரதோற்சவத்திற்கு இன்றியதையாததாக அமையும் இரத ஊர்தியானது இன்று இவ்வாலயத்தில் வெள்ளோட்டம் விடப்படுவது விநாயகர் பக்தர்கள் அனைவரது உள்ளங்களிலும் பெருமகிழ்வை உள்ளோட்டம் ஆக்கியுள்ளது.


இக்கருமத்திற்காக அமைக்கப்பட்ட தேர்த்திருப்பணிச் சபை அமைப்பின் அயராத முயற்சியாலும் செங்கற்படையானின் சீர்த்தத்திருவருள் நலத்தினாலும் விஸ்வப் பிரம்ம சிற்பக் கலைஞர்களான கொழும்பு ஜென சிற்பக் கலைக்கூடத்தினராலும் குறிப்பாக தலைவர் ஜெயகாந்தன் அவர்களின் சிறப்பான வழிகாட்டலும் கூடவே வவுனியாவினைச் சேர்ந்த சிந்துஜா சிற்பக் கலைக்கூடத்தின் தலைவர் தம்பிப்பிள்ளை சிறிதரனும் அவரது குழுவினரதும்அளப்பரிய உழைப்பாலும் இத்திருத்தேர் உருவாகியுள்ளது.

அற்புத கலைப்படைப்பாக அமையும் அழகிய திராவிட முகபத்திர சித்திரத்தேர் பூரணம் பெற்று அதன் திருநிலை உணர, அறிய அதனை இன்று வெள்ளோட்டம் விடுக்கின்ற விழுப்பமான நிகழ்வு இடம்பெறுகின்றது.

எனவே, இத்தகைய ஒரு புனிதமான வேளையில் இப்பெரு முயற்சியானது விநாயகப் பெருமானின் தெய்வ பலத்துடன் இடம்பெற்று, சித்திபெறும் வண்ணம் செங்கற்படை மகாதேவப் பிள்ளையாரைப் பிரார்த்தித்து எனது பரிபூரண ஆசிகளை வழங்குவதுடன் இத்திருப்பணியில் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களும் செங்கற்படை மகாதேவப்பிள்ளையாரின் பேரருள் பெற்று உய்யுமாறு பிரார்த்திக்கின்றேன்.

செங்கற்படை மகாதேவப்பிள்ளையார் ஆலயம், சங்கானை.

பிரம்மஸ்ரீ கா.கி.கைலாசநாதக் குருக்கள், பிரதமகுரு.



### ஆனந்தக் களிப்புத் தரும் கைங்கரியம்

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைமைத் தெய்வமான மகாதேவப் பிள்ளையாருக்கு இன்று ரம்மியமான ஒரு திராவிட முகபத்திரத் எண்கோண திருத்தேரானது சித்திரநிலையில் விசித்திர வண்ணத்தில் திருப்திகரமாக உருவாகியுள்ளது. ஈழத்தின் தலைசிறந்த தேர்களில் ஒன்றாக அமையப்போகும் இவ்விரதம் செங்கற்படை மகாதேவப்பிள்ளையார் பக்தர்களின் பலமான உளத்திடத்தினாலும் பொருள் நலத்தினாலும் ஜென சிற்பக் கலைகூடத்தினர் மற்றும் சிந்துஜா கலைக்கூடத்தினர் ஆகியோர ஆற்றல் மிகுந்த கைவண்ணத்தினாலும் எல்லாவற்றிற்கும் மேலாக விநாயகப் பெருமானின் பேரருட் திறத்தினாலும் திறம்பட உருப்பெற்று திருவுடன் திகழ்கின்றது.

இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த இவ்விரதம் வெள்ளோட்டம் விடப்படும் இன்றையபொழுது இத்திருப்பணியில் தம்மை இணைத்துக் கொண்ட அத்தனை அன்பு நெஞ்சங்களுக்கும் ஆனந்தக் களிப்புத் தருவது. சுமார் 29' உயரம் கொண்ட வண்ணமலை போல வடிவுபெற்று எம்பெருமான் ஆலய வீதியில் வலம்வரும் வகை நலத்தை சரிபார்க்கும் முறை நிலையில் அமையும் வெள்ளோட்ட நிகழ்வானது, செங்கற்படையானின் திருவருள் சித்தத்தின் உருநிலைச் செயற்பாடு.

செய்வினையின் முதலாகியும் செய்யும் பொருளாகியும் செய்பொருளின் செயலால் வரும் பயனாகியும் பயனால் வரும் சீர்பெறு விளைவாகியும் அமையும் பொய்யில்லா இறைவனான விநாயகக் கடவுளின் கருணைத்திறன் இன்று எம் முன்னே கண்காண வெளிப்பட்டு நிற்கின்றது.

எனவே, நீள நினைந்து அவன் திருவடி தொழுது இன்று இடம்பெறும் இப்பெருநிகழ்வு பொலிவுடன் திகழப் பி த்தித்து திருத்தேர் அமைப்புச் செயல்வினையினை முற்றுவித்த செம்மையாளர்கள் அனைவரையும் வளமார வாழ்த்தி அமைகின்றேன்.

அருளன்புடன்
தி.சிவதட்சண்ணாமூர்த்தி
(உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ்ப்பாணம்.
உபதலைவர் தேர்த்திருப்பணிச் சபை.

### சிந்தனைக்கு ரிய

சங்கானை செங்கற்படை மகாதேவப்பிள்ளையாருக்கு எண்கோண முகபத்திர தேர் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்துக் கோயில் வழிபாட்டிடமாக மட்டுமன்றி, கலைகளின் இருப்பிடமாகவும் கலை வளர்ச்சிக்கும் சமூக நிறுவனமாகவும் விளங்கிவந்துள்ளது. இறைவனே கலை வடிவமாகவும் கலைகளின் மிகச் சிறந்த ஆசானாகவும் விளங்குகின்றான். இவ்வகையில் இறைவன் பவனிவரும் தேரும் குறிப்பாகச் சித்திரத்தேரும் சமயம், ஆன்மீகம் ஆகியவற்றை மட்டுமன்றி, கவின் கலைகளைப் பிரதிபலிக்கும் கலை ஆக்கமாகவும் இலங்குகின்றது.

**எண்கோண முகபத்திரத் தேர்**

சங்கானை நகரிலே செங்கற்படை மகாதேவப்பிள்ளையார் கோயில் பரிபாலகர்கள், விநாயக அடியார்கள் எல்லோரும் இணைந்து எ ரு மானுக்கு அழகிய சித்திரத்தேரினை அமைத்துள்ளார்கள். இத்தேர்வடிவினை நோக்கும் போது இந்த உடம்பு ஒப்பற்றதொரு தேர், உயிரானது உடம்பை இயக்கிக் கொண்டிருக்கின்றது. உடல் வெறுஞ்சடம், உடலாகிய தேர் தன்னை இயக்கிக் கொண்டிருப்பது உயிர் என்பதை அறியவில்லை. இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேரே. பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள் புரியும் உண்மையை உணர்பவர்களுக்கு இவ்வுலகில் யாதுமோர் குறைவில்லை.

இச்சித்திரத்தேரின் அமைப்பும் உறுப்புகளும் பற்றிப் பல்வேறு விளங்கங்கள் தரப்படுகின்றன. மந்த கேசரி மலைகள் அச்சு, சூரிய சந்திரர் சக்கரம், ஆறு பருவங்கள் சத்தி, பதினான்கு உலகங்கள், பதினான்கு தட்டுகள், ஆகாயம் ஆசனம், உதயகிரி அஸ்தகிரிகள் கூவிரம், நதிகள் கொடிகள், நட்சத்திரங்கள் விதானம், மோட்ச உலகம் மேல்விரிவு, யாகங்கள், சட்டம், நாள் முதலியன குறுக்கு மரங்கள், அஷ்ட மலைகள்


### பேரானந்தம் 

எல்லோருக்கும் அருள் பாலிக்கும் சங்கானை செங்கற்படை
நிர்மாணித்து நிறைவுபெற்றதை நினைத்து நாம் அனைவரும் 
இப்புதிய சித்திரத்தேரின் திருப்பணியில் ஈடுபட்ட அ
கிடைக்கவேண்டுமென வாழ்த்தி வணங்கி அகில இலங்கை 
மகிழ்ச்சியடைகின்றேன்.

மலர் அமைப்பு:
பூ.கதிரவேலு - சங்கானை

தொகுப்பு:
வீ.கருணாகரன் -


பிள்ளையார் மணல் சல்லிவிற்பனை நிலையமும்
பிள்ளையார் டிரான்ஸ்போர்ட் சேவிஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
பிள்ளையார் ஸ்ரோர்ஸ் அன் இரும்பகம்
தொட்டிலடி, சங்கானை.
***
நாச்சிமார் பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, சங்கானை.
***
கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
இலட்சுமி ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
கா.வைத்திலி ம் அன் சன்ஸ்
பிரதான வீ சங்கானை.
***
S.R.P. அன் சன்ஸ்
இல.18,19, புதிய சந்தை,
புத்தளம்.
உரிமையாளர்: பேரம்பலம்
032 2265702
***
வெங்கடேஸ்வரா
இல.202, குமர லேன், கொழும்பு-11.
***
திருமால் ரேடர்ஸ்
இல.198, பிரின்ஸ் வீதி,
கொழும்பு - 11.
***
ஸ்ரீ விஷ்ணு அசோஸியேட்ஸ்
142, 144, நாலாம் குறுக்குத்தெரு,
கொழும்பு - 11.
***
குருசன் ரேடர்ஸ் - மார்க்கற், சங்கானை.
***
வீனஸ் டிரேட்
இல.77, 4ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11
***
எஸ்.பி.என். அன் கம்பனி
181, கெய்ஸர் வீதி, கொழும்பு-11
***
RAMASETHU & Co.
65, 4ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11
உரிமையாளர்: ரீ.மகேஸ்
***
மகாலஷ்மி பல்பொருள் வாணிபம்
மடத்துப்பிள்ளையார் கோயிலடி,
தொல்புரம்.
***
முருகன் கிரேசர்
விளான் றோட், தொட்டிலடி.
***
சாய்ராம் பிரிண்டேர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
பாக்கியரத்தினம்
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
பிரதான வீதி, சங்கானை.
தரன் ரேடர்ஸ்
யாழ்ப்பாணம்.
***
கலாபா இன்டஸ்ரியல் எலைட் சோடா
சங்கானை.
***
நிறோ பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.
***
கலைமகள் விலாஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
அருள்விநாயகர் மோட்டோர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
நெடுமால் சூடேல் பயணத்தின் பரிசம்
181/1, காலி வீதி,
வெள்ளவத்தை.


வளர்பிறை பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.
சக்தி எலக்ரிக்கல்ஸ்
ஓடக்கரை வீதி, சங்கானை.
காசிப்பிள்ளை அன் சன்ஸ்
சங்கானை.
பிள்ளையார் ரயர் வேர்க்ஸ்
சங்கானை.
சுரேஸ் மோட்டோர்ஸ் - சங்கானை.
இந்திரன் வயறிங் - சங்கானை.

நேசம் அழகுமாடம் - சங்கானை.
கருணா கிளினிக்
பிரதான வீதி, சங்கானை.
சிறி சந்தணராசா - சங்கானை.
நாகேந்திரன் மர அரிவு ஆலை
பிரதான வீதி, சங்கானை.
அம்பாள் இரும்புத் தொழிலகம்
சங்கானை.
ஆசைப்பிள்ளை அன் சன்ஸ்
சங்கானை.

பிள்ளையார் ஸ்ரோ
நிற்சாமம், சங்கா
சக்தி வீடியோ சென்ரர் - பிர
மகேஸ்வரி உணவ
ஆஸ்பத்திரி வீதி, சங்
தெய்வேந்திரம் உண
பிரதான வீதி, சங்க
ஸ்ரீமுகி என்ரபிறைச
ஆஸ்பத்திரி வீதி, சங்
உரிமையாளர்: கு.கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதேவப்பிள்ளையார் ஆலயம்
# வெள்ளோட்ட விழாச் சிறப்புமலர்

## கட்கிழமை - நண்பகல் 12 மணி



### திருத்தேர் தோன்ற திடமுடன் உழைத்த திருப்பணிச்சபை

பக்திமுறையில் பலமாய் உறையும் அத்திமுகனின் அடியவர்களாகிய சங்கானை மக்கள் பலரும் நீண்ட காலமாக சங்கானை செங்கற்படை மகாதேவப்பிள்ளையாருக்கு அற்புதமான கலை வண்ணம்கொண்ட சிற்பப் பெருந்தேர் ஒன்றை அமைக்க வேணவாகொண்டு விளங்கினர். அவ்விளைவின் பயனாக மக்கள் அனைவரும் ஒன்றுகூடி 2005ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில் திருப்பணி சபை ஒன்றினை அமைத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தம் கருமமே கண்ணாகச்செயற்பட்டனர்.

அத்தகைய சிறப்பான தொழிற்பாடு காரணமாக மிகக்குறுகிய காலத்தில் பெருகிய தனத்தில், அழகிய கோலத்தில் உறுதியான தோற்றத்தில் இன்று விநாயகப் பெருமானுக்கான திராவிட முகபக்திர ஷட்கோண சித்திரத்தேரானது சிந்தை கவரும் வண்ணம் தோற்றம் பெற்றுள்ளது.

இது கணபதிக் கடவுளின் கருணைத் திறத்தினால் இத்திருப்பணிச் சபைக்குக் கிடைத்த பெருஞ்சித்தியும் முதன்மையுமாகும். இவ்வகைத்தான திருப்பணிச் சபையில் ஒருமுகமாக இணைந்துசெயற்பட்ட செம்மையாளர்களான அதன் உறுப்பினர்களை இன்று பாராட்டுவதில் பழுது ஒன்றும் இல்லை. அவர்களின் செயற்திறன் பொலிவும் சித்தத் துடிப்பும் இடைவிடா உழைப்பும் வாய்சொல்லி எழுத்துருவில் அடங்காதவை. இன்று மலைபோல் எழுந்து நிற்கும் இத்தேருக்கு சமமானவை அவர்களின் அர்ப்பணிப்புகள். அத்கைய அன்புள்ளங்களின் விவர விளங்கங்கள் இங்கே தரப்படுவது சாலவும் பொருத்தமானது.

**தேர்த்திருப்பணிச் சபை:**

தலைவர்: **திருமதி செ.நாகராசா** அவர்கள் ஆலய தர்ம கர்த்தா,
செயலாளர்: **திரு.நா.இராசா** அவர்கள்,
பொருளாளர்: **கு.பாலசுப்பிரமணியம்** அவர்கள்,

**நிர்வாகக் குழுவினர், தேர்த்திருப் பணிக்குழு.**

### ரிய சிற்பத் தேர்

தூண்கள், அஷ்டதிக்கு யானைகள் தாங்கும் ஆதாரங்கள்: ஏழு கடல்கள் தேர்ச்சீலைகள், வேதாங்க உபாங்கங்கள் மணிகள், வாயுக்கள் படிகள், நான்கு வேதங்கள் குதிரைகள், கங்கை முதலிய தேவமாதர்கள் சாமர மிரட்டுவோர். மேருமலையில், சரஸ்வதி வில்லிற் கட்டிய மணி, வாசுகி நாண், விஷ்ணு பாணம், அக்கினி தேவன் பாணத்தின் முனை, வாயு தேவன் அம்பிறகு, பிரமன் சாரதி திரிபுரங்கள், மும்மலங்கள், தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி எனும் மூவசுரர்களும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகை ஆன்மாக்கள், தேவபதம், மோட்சபதம் ஆகியன திருவடி என மரபு வழியாக விளக்கம் கூறப்படுகின்றது. சிவபெருமான் முப்புரங்களை எரித்த தெய்வீக வரலாற்றைக் கூறுகின்ற சங்கத் தொகை நூல்களில் ஒன்றாகிய பரிபாடலிலும் இப்புராணச் செய்தி இடம்பெறுகின்றது. இத்தகு சிறப்புக்களைக்கொண்ட தத்துவார்த்த சிந்தனைகளுக்கு இருப்பிடமாக விளங்கும் சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் காண்கின்றது.

மாண்புகள் பலவற்றை தன்னகத்தே கொண்ட மயிலிட்டி மண்ணிலே இறையருளோடு இவ்வுலகில் தேர் செய்ய தோன்றிய கலைஞர் ஜெயகாந்தன் அவர்களின் அனுசரணையுடன் அவரது சோதரர்கள் ஸ்ரீதரன் மற்றும் ரவீந்திரன் போன்ற கலைஞர்களால் சிறப்பாக கலை அம்சத்தோடு தெய்வீக கலை மரபுடன் இத்தேர் உருவமைக்கப்பட்டிருக்கின்றது. சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையாரின் திருவாதியில் இத்தேர் வெள்ளோட்டம் காண்கிறது. இத்தகு புனித பணிகளில் இணைந்த அத்தனை அன்பர்களும் இறையாசி பெருகட்டும்.

**கவிமாமணி மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன் B.A., J.P.**
ஆசிரியர்,
ஸ்ரான்லிக் கல்லூரி.

### செங்கற்படை மகாதேவப் பிள்ளையாருக்கு அழகிய திராவிட முகபத்திர சித்திரத்தேர்

சங்கானைப் பதியில் அருள்பாலித்து காத்தருளும் செங்கற்படை மகாதேவ பிள்ளையார் எழுந்தருளி வீதியுலா வருவதற்கு அழகிய திராவிட முகபத்திர சித்திரதேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுகின்றது.

சங்கானை பக்த பெருமக்களின் ஆதரவும் தேர்த் திருப்பணிச் சபையினரின் விடா முயற்சியிலும் குறைந்த காலத்தில் திறம்பட நீண்டகால பாவனைக்கு ஏற்றவகையில் அழகுற அமைந்த சித்திரத்தேரினை அமைப்பதற்கு விஸ்வப் பிரம்மஸ்ரீ சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்களுடன் தேர்த் திருப்பணி சபையினர் ஆலோசித்து அவர்களின் அனுசரணையுடன் விஸ்வப்பிரமஸ்ரீ தம்பிபிள்ளை ஸ்ரீதரன் ஆகிய எனக்குச் சித்திரத்தேரினை அமைப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது எமக்குக் கிடைத்த அரும்பெரும் பணியை எம்மால் முடிந்தவரை சிறந்தமுறையில் அதனை நிறைவேற்றிஇருக்கின்றோம்.

சித்திரத்தேரில் எம்பெருமான் ஆரோகணித்து அருள்மழை பொழிய வேண்டும் என எண்ணியவர்களில் முக்கியமாக ஒருவரைக் குறிப்பிடவேண்டும். அவர் வேறுயாருமல்ல. தேர்த் திருப்பணிச் சபையின் பொருளாளர் திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள். அவர்களின் விடாமுயற்சிதான் இங்கு மிகக் கம்பீரமாய் காட்சிதரும் அழகிய திராவிடமுக பத்திர சித்திரத்தேர். அவர் கனவில் எம்பெருமான் தனக்குத் தேர் அமைத்துத் தரும்படி கனவில் காட்சி அளித்துள்ளார். அக்கனவை சங்கானை ஏகோபித்த மக்களின் ஆதரவுடன் கனவை நினைவாக்கி உள்ளார் என்றால் அது எல்லோராலும் முடியாத காரியம்.

ஆகையால், திரு.பாலசுப்பிரமணியம்அவர்களுக்கு எம்பெருமான் செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் நல்லாசிகளை வழங்கவேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

இத்தேரினை உருவாக்குவதற்கு எமக்குச் சந்தர்ப்பம் வழங்கிய திரு.ச.ஜெயகாந்தன் அவர்களுக்கு சிந்துஜா சிற்பக் கலைக்கூட கலைஞர்கள் அனைவருக்கும் மேலும் பல உதவிகளை வழங்கிய சங்கானை பக்த பெருமக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஸ்தபதி விஸ்வபிரம்மஸ்ரீ தம்பிபிள்ளை ஸ்ரீதரன்**
(மயிலிட்டி) - (வவுனியா)

### ம அடைவோம்

ற்படை மகா தேவப்பிள்ளையாருக்குத் ஒரு புதிய சித்திரத்தேர்
வரும் பேரானந்தம் அடைவோமாக.
– அனைவருக்கும் விநாயகப் பெருமானுடைய திருவருள்
ங்கை சைவர் கழகத்தின் சார்பில் நல்லாசிகள் கூறுவதில் பெரு

குப்பு:
ரவி - சங்கானை

**சைவப்பிதா பொன்.சாம்பசிவம் ஆசிரியர்**
கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்,
ஸ்தாபகர், வடஇலங்கை இந்து மன்றங்கள்,
அமைப்பாளர் - அகில இலங்கை சைவர் கழகம்.

ர் ஸ்ரோர்ஸ்
சங்கானை.
ர் - பிரான்பற்று.
உணவகம்
தி, சங்கானை.
ம் உணவகம்
, சங்கானை.
ரபிறைசஸ்
தி, சங்கானை.
: கு.குணசிறீ

உதயா வெதுப்பகம்
வல்லை வீதி, சங்கானை.
விதுஷா கிறீம் ஹவுஸ்
பிரதான வீதி, சங்கானை.
சீதா தொலைத்தொடர்பு நிலையம் அன்ட் செலிங் இன்சூரன்ஸ்
(முகவர் அலுவலகம்)
விக்னேஸ்வரா வீதி, நிற்சாமம்.
ரவி ஸ்ரோர்ஸ்
விக்னேஸ்வரா வீதி, நிற்சாமம்

ரவி ஸ்ரோர்
விக்னேஸ்வரா வீதி, நிற்சாமம்.
அருள் பிறின்ரிங் சென்ரர்
சங்கானை.
இந்து இளைஞர் மன்றம்
சிலம்புப் புளியடி, சங்கானை.
அருள் ஸ்ரோர்
விக்னேஸ்வரா வீதி, நிற்சாமம்.
இந்து மகளிர் மன்றம்
சிலம்புப் புளியடி, சங்கானை.



கந்தசாமி அன் சன்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
சோமசுந்தரம் சைக்கிள் வேர்க்ஸ்
சங்கானை.
***
றஞ்சன் ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
மக்கள் வங்கி - 108
சங்கானை.
***
பிரதீஸ் தொலைத்தொடர்பகம்
தொட்டிலடி, சங்கானை.
***
FLASH NET
நிகரை வீதி, சங்கானை.
சபேஸ் வீடியோ அன் போட்டோ
சங்கானை.
***
அம்பிகை பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.
***
குமரன் பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.
***
பேர்ள் நியூ பசன் ஹவுஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
கிருசிகா பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.
***
சுகா பட மாடம்
பிரதான வீதி, சங்கானை.
***
INTEL COMPUTER SERVICES
பிரதான வீதி, சங்கானை.
***
திருமகள் தொலைத்தொடர்பகம்
பிரதான வீதி, சங்கானை.
***
சங்கானை பார்மசி
பிரதான வீதி, சங்கானை.
***
நியூ மெடிப் பிளஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
லீலா பேக்ஹவுஸ்
பிரதான வீதி, சங்கானை.
***
அன்னை ரேட்ஸ்
பிரான்பற்று வீதி, சங்கானை.
***
சின்னவன் பல்பொருள் வாணிபம்
பிரான்பற்று வீதி, சங்கானை
***
மணி ஜுவெல்லர்ஸ்
பிரதான வீதி,
சங்கானை.
***
யோகேஸ்வரன் மோட்டார் திருத்தகம்
சங்கானை.
***
கஸ்சிகா உணவகம்
பிரதான வீதி, சங்கானை.
***
N.K.S. வியாபார நிலையம்
(குசேலன்) பிரதான வீதி,
சங்கானை.
***
கிஸ்ணா புடைவையகம்
பிரதான வீதி, சங்கானை.
***
வேலன் அழகுமாடம்
பிரதான வீதி, சங்கானை.
***
சிவசோதி களஞ்சியம்
பிரதான வீதி,
சங்கானை.
***
பத்மராசா அன் சன்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் அராஜகங்களின் தொடர்ச்சியே ஹாட்லிக் கல்லூரி மாணவர் காணாமற் போனமை

யாழ்ப்பாணம், ஒக.6

படையினரின் அராஜகங்களின் தொடர்ச்சியே ஹாட்லிக் கல்லூரி மாணவர் காணாமல் போன சம்பவம்-

இவ்வாறு தெரிவித்துள்ளது வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம். இது தொடர்பாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்:

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தனியார் கல்வி நிலையத்துக்கு சென்ற ஹாட்லிக் கல்லூரியின்சிரேஷ்ட மாணவ முதல்வன் ஜெகதீஸ்வரன் கஜேந்திரன் காணாமல் போயுள்ளார்.

சர்வதேச அரசோ, இனவாத இலங்கை அரசோ தமிழ் மக்களுக்கு இராணுவம் இழைக்கும் அநீதிகளை தட்டிக் கேட்காத நிலையில் எம்மீதான அடக்கு முறைகள் அதிதீவிரமாக அதிகரித்துள்ளது. சந்திகள் முதல் பொந்துகள் வரை ஆயுதங்களுடன் தரித்து நிற்கும் சீருடையினரும் சிந்திக்கின்ற காலம் வரும் என்பதை தமிழ் மக்கள் ஒரு போதும் நம்பவில்லை.

மாணவர்களாகிய நாங்கள் எமது சுதந்திரமான கல்விக்கான வழிகளை நாடி நிற்கும் நிலையில் மேற்படி சம்பவம் ஒட்டு மொத்த தமிழ் மாணவர்களையும் கொதிப்பில் ஆழ்த்தியுள்ளது. காணாமல்போன மாணவனை விடுவிக்கக்கோரி வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ஹாட்லி மாணவர்களுக்கு ஆதரவாக ஒட்டுமொத்த மாணவர்களும் வீதியில் இறங்குவர் என்பதனை வலியுறுத்திக் கூறுகின்றோம்- என்று உள்ளது.

கல்வியற்கல்லூரி மற்றும் உதயன், சுடரொளி இணைவில்

# கற்றல், கற்பித்தல் தர உள்ளீடுகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கப் போட்டி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மற்றும் உதயன், சுடரொளி-பத்திரிகைகள் ஆகியவை இணைந்து கற்றல், கற்பித்தல் தர உள்ளீடுகள் ஆக்கத் திறன் போட்டியை நடத்தவுள்ளன.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி வகுப்புகளில் கற்றல் கற்பித்தல் தர உள்ளீடுகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களிடையே இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி யாழ். தேசிய கல்வியற் கல்லூரியில் நடத்தப்படவுள்ள இப் போட்டியில் பாடசாலைகளில் கற்பிக் கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியின் ஆரம்பக் கல்வி உள்ள கப்பயிற்சி ஆசிரி யர்கள், கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரிய பயிலுனர்கள் மாவட்டப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோர் பங்குபற்ற முடியும்.

விண்ணப்பங்களை யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி அல்லது உதயன் பணிமனையில் பெற்று பாடசாலை அல்லது கல்லூரி அதிபரூடாக 'இணைப்பாளர், கற்றல், கற்பித்தல் தர உள்ளீட்டு மையம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி, த.பெ.இல. 01, கோப்பாய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# இலங்கை நிலைவரம் கண்டு ஐ.நா. செயலாளர் கவலை

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து கவலையடைந்திருக்கும் ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான், மோதல்கள் உடனடியாக நிறுத்தி மாவிலாறு தண்ணீர்ப் பிரச்சினையை பேசித் தீர்ப்பதற்கான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் கோரியிருக்கிறார்.

''இலங்கையிலிருந்து கிடைக்கும் வன்முறைச் சம்பவங்களின் அதிகரிப்புக் குறித்து செயலாளர் நாயகம் மனக்கலக்கமடைந் திருக்கிறார். மோதல் காரணமாக மக்கள் இடம் பெயர்கிறார்கள். சிறுவர்கள் உட்பட பல சிவிலியன்கள் காயங்களுக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை அறிந்து அவர் மனம் வருந்துகிறார் "-

என்று ஐ.நா.பேச்சாளர் ஊடகவியலாளர்களிடம் பேசும் போது தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வரும் மனித நேய அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் இடங்களுக்குச் சென்று வருவதற்கு இடுக்கண்கள் எதுவும் இடம் பெறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் ஐ.நா. செயலாளர் கேட்டிருக்கிறார். மோதலை தீர்த்துவைக்குமுகமாக நோர்வே எடுத்து வரும் முயற்சிகளையும் செயலாளர் நாயகம் கருத்தில் எடுத்தே இந்த வேண்டு கோளை விடுத்திருக்கிறார் என்றும் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

# வரணியில் மணல் வீதிகள் புனரமைப்பு

வரணிக் கிராமத்தில் நியாப் II செயற்றிட்டத்தின் கீழ் நான்கு மண் வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள் ளன.

குடமியன் கிராம அலுவலர் பிரிவில் பாடசாலை வீதி, மற்றும் வைரவர் கோவில் வீதியும்,- கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவில் கரம்பைக் குறிச்சி மேற்கு வீதி, மற்றும் கரம்பைக் குறிச்சி கிழக்கு பெருவெட்டி வீதி என்பனவும் இவ்வாறு புனரமைக்கப் படவுள்ளன.(எ-122)


## 12 ஆம் ஆண்டு நினைவுகளில்

| ஆண்டவன் படைப்பு | | அந்நியன் அழிப்பு |
| --- | --- | --- |
| 07 - 01 - 1936 |  | 21 - 07 - 1994 |

அமரர் தம்பு துரைராஜா

திதி: சதுர்த்தசி 07.08.2006

''இன்ப துன்பம்'' யாதென்றறியா திருந்த எம்மை
துன்பமெனும் துயரக் கடலில் - ஓயாத
'அலையா' அலையவிட்டு - ஐயா நீங்கள்
ஓர் நொடியில் மீளாத்துயில் கொண்டதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கும்:

சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு, பிரான்பற்று. (52979) (39-19-14)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



உ

மிருசுவில் படித்த மகளிர் திட்டம்- துர்க்காபுரம்



ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாள் ஆலய

## அலங்கார உற்சவம்

அலங்கார உற்சவம் நிகழும் விய வருடம் ஆடி மாதம் 15 ஆம் திகதி (31.07.2006) திங்கட்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை (09.08.2006) இறுதி நாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறுகின்றது.

9 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்கா தேவியின் தெய்விக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியின் வீதியுலாவுடன் சேர்ந்து வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும். தினந்தோறும் காலை 10 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூஜை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலாவும்நடைபெறும். வழமை போல் இ.போ.ச. போக்குவரத்துகள் நடைபெறும்.

பரிபாலன சபை,
துர்க்காபுரம் ப.ம.திட்டம்,
மிருசுவில்.

ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு.சி.நவரத்தின ஐயா.
(52959) (39-19-14)



## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

| வையத்துள் அறிமுகம் | | தெய்வத்துள் சங்கமம் |
| --- | --- | --- |
| 19 - 10 - 1935 |  | 08 - 08 - 1995 |

அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா

திதி - 07.08.2006

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பதினொரு ஆண்டுகள்
அல்ல எத்தனையோ ஆண்டுகள் தான்
சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு என்றும் மாறாதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

சந்தையடி, மாவிட்டபுரம்.

அன்பு மனைவி, மைத்துனர்கள், சகோதரிகள், மைத்துனிகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(52924) (39-19-14)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
| --- | --- | --- |
| 22 - 04 - 1942 |  | 19 - 07 - 2005 |

திருமதி

சிவபாலஎம்பிகை சுந்தரலிங்கம்

திதி: பூர்வபக்க திரயோதசி (07-08-2006)

ஓராண்டு கால மோடியே போயிற்றம்மா
தீராத துயராலே தீச்சுடரா யானோமே
ஆறாத எம்துயரை ஆற்றுவார் யாருமில்லை
மாறாத உன் பெருமை மங்காது ஒரு நாளும்
அன்பான மனைவியாய் பண்பான குல விளக்காய்
உன்னோடு பிறந்தோர்க்கு உற்றதோர் மந்திரியாய்
எந்நாளும் பணியாற்றி ஏற்றமாய் வாழ்ந்து விட்டு
மின்னாமல் முழங்காமல் மறைந்தாயே மாணிக்கமே!

சென்னையிலே சிறப்பாய் வாழ்ந்த வாழ்வை விட்டு
உன்னை உதிர்த்த மண்ணில் உறங்கவோ ஓடி வந்தாய்
அன்பான கணவரையும் உடன் பிறந்தார் அறுவரையும்
எந்நாளும் ஏங்கவிட்டு எங்கு சென்றாய் ஏந்திழையே?
உற்றாரும் உறவினரும் உன் புகழ் பாடி நிற்க
பெற்றோரும் மற்றோரும் போன இடஞ் சென்றாயோ?
பிறப்பும் இறப்பும் உலக நியதி யென்றாலும்
மறக்க முடியவில்லை மாணிக்கமே உன் நினைவை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆ.சுந்தரலிங்கம் - கணவர்
(இளைப்பாறிய தபாலதிபர்)
85, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்
(528881) (24-39-19-14)

உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
உன் அன்புக் கணவர் , மகன்-சஞ்சீவன்,
உடன் பிறப்புகள், குடும்பத்தார்,
சுற்றத்தார், நண்பர்கள்.
தொ.பே.இல. 2228005 , 0777420240



## நினைவலைகள்

| முதலாமாண்டு | இருபதாமாண்டு | முப்பதாமாண்டு |
| --- | --- | --- |
|  |  |  |
| அமரர் சின்னப்பு முருகேசு (இளைப்பாறிய போலீஸ்உத்தியோகத்தர்) ஆண்டவன் அடியில் 17.06.2005 திதி: திரயோதசி | அமரர் முருகேசு ஜெயகாந்தன் ஆண்டவன் அடியில் 06.02.1986 | அமரர் முருகேசு அன்னலட்சுமி ஆண்டவன் அடியில் 16.03.1976 |

பரமன் பாதம் பணிந்த
பாச தீபங்களே!
நிதம் உங்களை நினைக்க

நெஞ்சம் கனக்கிறதே!
நினைவு தடுமாறுகிறதே!
கண்ணீர்ப் பூக்கள் சொரிகிறதே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பத்தமேனி, கந்தரோடை, சுன்னாகம். -குடும்பத்தினர்.
(52970) (39-19-14)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடுக்கிகள் மூலம் உணவு பரிமாறாத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

## சுகாதார சேவைப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.7

சிற்றுண்டி வகைகளை இடுக்கிகள் மூலம் வழங்காத தேநீர்ச்சாலைகள், உணவகங்கள் பற்றிய தகவல்களைப் பொதுமக்கள் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கினால் அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பின்வருமாறு மேலும் விளக்கினார்:

குடாநாட்டில் ஏற்படுகின்ற தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தேநீர்ச்சாலைகள், உணவகங்கள் ஆகியவற்றில் இறுக்கமான சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஊடாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இடுக்கிகள் மூலம் சிற்றுண்டிகள் பரிமாறப்படும் நடைமுறை சில தேநீர்ச்சாலைகளில் பின்பற்றப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே, இத்தகைய நடைமுறையினைப் பின்பற்றாத தேநீர்ச்சாலைகள் பற்றிய விவரங்களைப் பொதுமக்கள் தத்தமது பிரிவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் அறிவித்தால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (1-13)

# காக்கைதீவு மீனவர் சங்கம் 3மாத காலமாக இயங்கவில்லை

## மீனவர் கடலுக்குச் செல்லமுடியாத நிலை

நவாலி,ஓக.7

காக்கைதீவு கடற்றொழிலாளர் சங்கம் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக இயங்காததினால் அப்பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாது பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கடலில் தொழில் செய்வதற்கு இராணுவத்தினரின் அனுமதி தேவை. இந்த அனுமதியை சங்கமே பெற்றுக்கொடுக்க வேண்டும். இதனால், இந்த அனுமதியைப் பெறுவதற்கு ஆனைக்கோட்டை கிராமசேவையாளர், சண்டிலிப்பாய்ப் பிரிவு கடற்றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் சிவபாதம் ஆகியோரின் உதவியை இந்த மீனவர்கள் நாடி நிற்கின்றனர். (1-100)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

நல்லூர்,ஓக.7

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று 'கோமாதாவின் மகிமை' என்ற தலைப்பில் சிவஸ்ரீ சிவலோகநாத தேசிகரின் சிறப்புச் சொற்பொழிவும் ஏழாலை ஆத்மஜோதி தியான மண்டப அறநெறிப்பாடசலை, அராலி கோகுலம் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளன. (203)

# சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவில் விவசாய இயந்திரம் திருத்தும் பயிற்சி

## இளைஞர், யுவதிகளுக்கு வழங்க ஏற்பாடு

வலி.தென்மேற்கு,ஓக.7

கனடா நாட்டு நிறுவனமான (World University Service of Canada) வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரிவிலுள்ள 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட வயதையுடைய இளைஞர் - யுவதிகளுக்கு விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைத் திருத்தும் பயிற்சிநெறி ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவிருக்கின்றது.

ஆறுமாத காலம் நடைபெறவுள்ள இப் பயிற்சிநெறி சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்றும்-

இதற்கு மேற்படி நிறுவனம் ஊக்கமளிக்கும் திட்டம் ஒன்றையும் கொண்டிருப்பதாகவும் - வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பயிற்சி நெறியில் உழவு இயந்திரம், லான்ட் மாஸ்ரர் திருத்தல், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தல் உட்பட விவசாயத்துடன் தொடர்புடைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் திருத்தும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப் பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்பும் இளைஞர், யுவதிகள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாம் அல்லது சண்டிலிப்பாயிலுள்ள பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (135)

# சகல கட்சிகளையும் அழைத்து ஜனாதிபதி அவசர ஆலோசனை

## அர்த்தமற்ற கடைசி நேர முயற்சி என்று கூறி ஐ.தே.க. புறக்கணிப்பு

கொழும்பு, ஓக.7

நாட்டில் உருவாகியிருக்கும் பாதுகாப்பு நெருக்கடி தொடர்பாக விளக்கமளிப்பதற்காக, அனைத்துக் கட்சிகளினதும் கூட்டம் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை அவசரமாகக் கூட்டினார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

மாவிலாறு நீர் அணை விவகாரம், அதன் தொடர்ச்சியாகக் கிழக்கில் வெடித்த மோதல்கள் மற்றும் மூதூரில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் போன்ற விடயங்கள் தொடர்பில் அரசியல் கட்சிகளின் கருத்துகளை ஒன்று திரட்டுவதற்கான நோக்குடன் இந்தக் கூட்டத்தை ஜனாதிபதி கூட்டினார் எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதி கூட்டிய இந்த சர்வ கட்சிக் கூட்டத்தில் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சி கலந்து கொள்ளவில்லை.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் சீர்கெடுவதற்கு அரசுதான் முழுப் பொறுப்பு என்று அக்கட்சி தெரிவித்துள்ளது. (க)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.7

நாவாந்துறை புனித விண்ணக அன்னை ஆலயத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் வழிபாடுகள் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 15ஆம் திகதி காலை 6.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (202)

* * *

முழங்காவில்,ஓக.7

முழங்காவில் அமிர்தபாசணி சமேத சந்திரசேகர வாரிவளநாத சுவாமி ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திருவாசமுற்றோதல் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்கத்தினரின் ஆதரவில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் திருவாசக முற்றோதல் இடம்பெற்று வருகின்றது.

திருவாசக முற்றோதல் முடிவில் மணிவாசகப் பெருமான் வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெற்றுத் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும். (203-323)

* * *

முழங்காவில்,ஓக.7

குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவை அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 31ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் 10ஆம் திருவிழாவான நாளை மறுதினம் தீப பூசை நடைபெறவுள்ளது. தீப பூசையுடன் திருவிழா நிறைவடையும். (203-323)

* * *

முழங்காவில்,ஓக.7

பரந்தன் உமையாள்புரம் கண்ணகை அம்பாள் ஆலய பஞ்சகுண்ட பிரதிஷ்டா மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிசேகத்தை முன்னிட்டு அம்பாள் கிராமப் பிரதட்சணம் செய்து வருகின்றார்.(203-323)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.7

உடுவில் ஸ்ரீமீனாட்சி ... வர சுவாமி ஆலயத்தில் நடைபெற்று வரும் கந்தபுராணப் பூர்த்திவிழா நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

ஆடிப்பூரணை தினமான அன்று மாலை 3 மணிக்கு அம்பாளுக்கும் முருகப்பெருமானுக்கும் விசேட அபிசேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. (203)

* * *


வேலணை,ஓக.7

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இன்று திங்கட்கிழமை பகல் வேட்டைத்திருவிழாவும் இரவு சப்பரமும் நாளை செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

ஆலயத்திற்குச் செல்பவர்களின் நன்மைகருதி 776, 780 பஸ் சேவைகள் இக்கோயில் வீதியூடாக நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-107)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம் 9ஆம் திருவிழா



## நல்லூரான் திருவடி - 03



தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி.

- யோகர் சுவாமிகள்

## சஞ்சலப் பிணி போக்கிடு

குஞ்சித பாதக் குமரா
விஞ்சிடும் வீர வேலவா
வஞ்சினம் கொண்ட சூரன்
நெஞ்சினைப் பிளந்த சங்காரா
அஞ்சிடும் பகை கண்டு
துஞ்சிடும் அடியவர் துயர்
பஞ்செனப் பறக்க நல்லை
பதியினில் வாழ் முருகா
வெஞ்சினம் கொண்டு வீரவேல்
ஏந்தி வந்திடு எம்மவர்
சஞ்சலப் பிணி போக்கிடு
சண்முகா சரவணா சரணம்

- வி.வானதி

## தேசத்தில் அமைதியுறச் செய்வான்!

சூராதி சூரர்படை தொலைத்தார் தாமே
துணைவியர்கள் இருவருடன் சுகித்தார் தாமே
வாராத வளம்வழங்க வல்லார் தாமே
மயிலேறி உலகைவலம் வந்தார் தாமே
தீராத வல்வினை நோய் தீர்ப்பார் தாமே
தேசத்தில் அமைதியுறச் செய்வார் தாமே
பேராரும் பொய்கையிலே பிறந்தார் தாமே
பீடாரும் நல்லைநகர்ப் பெருமானாரே.

- தனங்களப்பு வ.சின்னப்பா

## எல்லையில்லா நம்வினை நீங்கும்

*நல்லூ ரான்திரு வடியை நாளும் துதித்திட்டால்*
*எல்லா செல்வங் களும்கை கூடும் - எல்லையிலா*
*நம்வினை களோநல் லைப்பதி நாடின்*
*நலமுடனே! நீங்கும் காண்.*

- என்.பி.சிறீந்திரன்

## நல்லையில் உறையும் நாதகீதன்

*நல்லையி லுறையும் நாத கீதனே*
*சொல்லொணாத் துன்பச் சுழியினுள் துவளுமெம்*
*எல்லையே யில்லா இடரதைக் களைந்திட*
*வல்லமை நல்கி வரந்தர வேண்டும்!*

*நித்திய முந்தன் நிழலிலே யிருந்து*
*சத்தியம் காத்திடும் சக்தியை யீவாய்!*
*யுத்தமே யில்லா யுத்தியைக் காட்டி*
*பத்திர மாகவே பாரதைக் காப்பாய்!*

- வி.சி.குஞ்சிதபாதம்

விழா சிறப்புற
வாழ்த்துவோர்:
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
நவீன முறையில் தங்கநகைகளை அம்சத்தோடு
கூடிய பம்பே டிசைன் மெசின் கட்டிங் மூலம்
செய்துபெற்றுக்கொள்ள
ஸ்ரீ நாகா பம்பே டிசைன் & கட்டிங் சென்ரர்
288, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0774147338

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனாசிரியர்கள் பதவி வெற்றிடம்

சர்வோதயம் WUSE க.உ.ப.சே.

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் (WUSC) அனுசரணையுடன் யாழ். மாவட்ட சர்வோதயத்தால் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கீழ் குறிப்பிடப்படும் தொழிற்பயிற்சி நெறிக்கான போதனாசிரியர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வீட்டு உபகரணங்கள் திருத்துதல் (நீர் இறைக்கும் மின் மோட்டார், அரைக்கும் இயந்திரம்)
2. வீட்டு மின் இணைப்பு செய்தல்
3. ரீவி, டெக், குளிர்சாதனப் பெட்டி, வானொலிப்பெட்டி திருத்துதல்
4. அலுமினிய பொருத்துக்கள்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த, 18-45 வயதிற்கிடைப்பட்ட, குறிப்பிட்ட துறையில் குறைந்தது 3 வருட அனுபவமுள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 12/08/2006ஆம் திகதிக்குள் கிடைக்கக் கூடியதாகக் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தெரிவுசெய்யப்பட்டவர்கள் மாத்திரமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

**அ.கி.சிவசுப்பிரமணியம்**
மாவட்ட இணைப்பாளர்,
சர்வோதய மாவட்ட நிலையம்,
3, பிளச்சஸ் லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (சி/50685) (24-14-16)

# பணிநிலை வேண்டுகை

*கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக இயங்க உள்ள நிறுவனமொன்றுக்கு பணியாள்களை அமர்த்தவுள்ளது இலங்கை கம்பனிகள் அதிகார சபை. எனவே, அதற்கு அமைய ஏனைய மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்.*

**1. வெளிக்கள உத்தியோகத்தர்கள் தரம் 2**
- க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்
- க.பொ.த. உயர்தரம் விரும்பத்தக்கது

**2. வெளிக்கள உதவியாள்கள்**
- தரம் 8 சித்தி அடைந்திருந்தல் வேண்டும்.
- க.பொ.த. (சா/த.) விரும்பத்தக்கது

*பொது நிபந்தனைகள்:*

★ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★ வயது எல்லை: 18 தொடக்கம் 40
★ இலங்கை பிரசா உரிமை
★ விண்ணப்ப முடிவு திகதி: 15.08.2006
★ விண்ணப்ப முகவரி:

**இலங்கை கம்பனிகள் அதிகார சபை,**
**மே/பா. உதயன் பணிமனை**
**1-9 தங்ககம்**
**யாழ். சாலை, கிளிநொச்சி.**
(சி/50674) (24-14-16)

# வருடம் ஒன்றில்...

மலர்வு 16 - 10 - 1942



உதிர்வு 18 - 08 - 2005

## திருமதி வினாயகமூர்த்தி பரமேஸ்வரி

திதி: 07.08.2006

அன்பு தனைப் பாலாக்கி
அறிவு தனை உணவாக்கி
இன்பமே வாழ்வாக்கி
இனமெலாம் ஒன்றாக்கி
நல்லிடம் நாங்கள் வாழ
நாராக உழைத்தீரம்மா!
வருடங்கள் ஒன்றாய் உங்கள்
பருவுடல் காணாதிங்கே
அழுதுமை அஞ்சலித்தோம்
வாழ்விக்க வாருமம்மா!

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.* (53015) (18-14-16-24) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராமசாமி செட்டியார் சுப்பம்மாள்



(53016) (24-14-16)

திருமதி இராமசாமி செட்டியார் சுப்பம்மாள் அவர்கள் நேற்று (06.08.2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

142/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 222 8165
*தகவல்:* இரா.செல்வவடிவேல் (ஆசிரியர் மகன்).

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




கைதடி வடக்கைச் சேர்ந்த கிருபதாஸ் - தயாநிதி தம்பதியரின் செல்வப் புதல்வி **டெனிசியா** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07.08.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை டென்மார்க்கில் இருக்கும் அன்பு அப்பா, அத்தை, அப்பப்பா, அப்பம்மா, சித்தாமார், சுவிஸில் இருக்கும் அத்தை, மாமா, அம்மப்பா, அம்மம்மா, அன்ரா, மாமா, கைதடியில் இருக்கும் அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மா, மீசாலையில் இருக்கும் அம்மம்மா, மாமாமார், பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, சாவகச்சேரியில் இருக்கும் அன்ரா, சித்தப்பா மற்றும் உறவினர்கள் அனைவரும் கயிற்றசிட்டி அருள் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.




கைதடி வடக்கு,
கைதடி. (52999) (24-14) **கந்தையா (அப்பப்பா).**

# நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.7

இளவாலையூர் அமரர் வே.கதிரேசுவின் ஞாபகார்த்த நிகழ்வுகள் நாளைமறுதினம் புதன்கிழமை கொட்டாஞ்சேனை வீரமைலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியத் தலைவர் ஆர்.எம்.நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூல்கள் அன்பளிப்பு, சிறப்புரை என்பவற்றுடன் இளவாலையூர் வேலுப்பிள்ளை கதிரேசு ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் நிதியமும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இவரது நினைவாக வெளியிடப்பட்ட தொடர்பாடலுக்கான தகவல் தொழில்நுட்ப நூல்கள் கொழும்பில் உள்ள சில பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1-202)

# கண்ணீர் அஞ்சலி

*எம்முடன் பணியாற்றும்*
**திருமதி ரி.ரி.தம்பையா**
*அவர்களின் சகோதரரும் காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளருமாகிய*



**பொன்.கணேசமூர்த்தி**

*அவர்களின் அகாலமரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.*

**தாதிய உத்தியோகத்தர்கள்,**
**அரசினர் ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.**

(50690) (24-14-16)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் 11 19 50 54

சுப்பர் இல. 07

ஜக்பொட் பரிசு ரூ. 7,485,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 4 இல. + சுப்பர் இல. | 0 | 7,485,400/- | - |
| 4 இல. | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 3 இல. + சுப்பர் இல. | 30 | 5,000/- | 150,000/- |
| 3 இல. | 421 | 1,000/- | 421,000/- |
| 2 இல. + சுப்பர் இல. | 1362 | 500/- | 681,000/- |
| 2 இல. | 20548 | 40/- | 821,920/- |
| 1 இல. + சுப்பர் இல. | 19462 | 20/- | 389,240/- |
| 1 இல. | 291513 | 10/- | 2,915,130/- |
| மொத்தம் | | | 7,378,290/- |
| [illegible] | 5 | 120,000/- | 600,000/- |
| [illegible] | 333343 | | 7,978,390/- |

| | |
| --- | --- |
| பொலன்னறுவை | 301251642-1-19 |
| காலி | 301255894-1-44 |
| பதுளை | 301256848-9-22 |
| மட்டக்களப்பு | 301259141-7-01 |
| திருகோணமலை | 301257682-0-45 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 8,264,300/-

அபிவிருத்தி லொத்தர் சபை


# உளமார வாழ்த்துகின்றோம்

தமது குருத்துவப் பணியின் 25 ஆண்டுகள் சிறப்புற நிறைவு செய்யும் எமது அன்பிற்கும் வணக்கத்திற்குமுரிய



**அருட்திரு சி.ஜே.ஜெயக்குமார் அடிகள்** அவர்கள்

தொடரும் அருட் பணிக்கும் கியூடெக் / கரித்தாஸ் நிறுவனங்களின் அருட்பணிகளுக்கும் தேவையான உடல்நல ஆரோக்கியத்தையும் ஆன்ம பலத்தையும் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

- **தலைவர், நெறியாளர், பணியாளர்,**
**யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம்,**
**இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.** (சி/50680)
(24-14)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 08 - 1903



உதிர்வு 07 - 08 - 2003

## வேலுப்பிள்ளை துரையப்பா (தொண்டைமானாறு)

திதி: 07.08.2006

ஆண்டுகள் மூன்றாச்சு ஐயா நீங்கள் தெய்வத்துள் தெய்வமாகி
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்களை மறக்கமாட்டோம்
உங்கள் திருமுகம் எந்நேரமும் கண்ணெதிரே தோன்றும்
உங்கள் பிள்ளைகளை நல்வழி காட்டினீர்கள்
சந்நிதி முருகனின் தொண்டன் ஐயா நீங்கள்
ஐயா எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்களை மறக்கமாட்டோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை வேண்டுகிறோம்.

தகவல்:
மயில்வாகனம் பரமேஸ்வரி,
தொண்டைமானாறு.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளை**

(18-24-14)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 07 ★ 02 ★ 1982



மறைவு 24 ★ 06 ★ 2006

## அமரர் மகேந்திரநாதன் சுஜீபன்

[உடுவில் மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவனும் அமெரிக்கா, நியூயோர்க் பல்கலைக்கழக மாணவனும்]

45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (07.08.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (52998) (24-14-16) - **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7மணி நேரத்தில் 4ஆயிரம் குண்டுகள் வீச்சு: லெபனான் மீது இஸ்ரேல் கொடூர தாக்குதல்

இஸ்ரேல், ஓக.7

லெபனான் மீதான குண்டுத்தாக்குதல்களை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. நேற்று முன்தினம் மட்டும் இஸ்ரேல் போர் விமானங்கள் 7மணி நேரத்தில் 750தடவைகள் 4ஆயிரம் குண்டுகளை வீசியுள்ளன.

லெபனானின் எல்லையோரமுள்ள அய்தருன் கிராமத்தின் மீது 2ஆயிரம் குண்டுகளை இஸ்ரேல் போர் விமானங்கள் வீசின. இதில் 14 பேர் காயமடைந்ததாக தகவல்கள் தெரிவித்தன. தாக்குதலுக்கு அஞ்சி கிராம மக்களில் பெரும்பாலானோர் இருப்பிடங்களை விட்டு வெளியேறிவிட்டதால் உயிர்ச்சேதம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

எல்லைப் பகுதியில் உள்ள 15 லெபனான் கிராமங்களை முற்றிலும் நாசப்படுத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாகவும் இதன் மூலம் அங்குள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் மறைவிடங்களை ஒழித்துக்கட்ட முடியும் என இஸ்ரேல் கருதுவதாகவும் கூறப்படுகின்றது.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் இராணுவத்தினர் தொடர்ந்து முன்னேறி வருவது திருப்தி அளிக்கிறது. விமானத்தாக்குதலில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் மூன்று பேர் கொல்லப்பட்டனர் என்று இஸ்ரேல் இராணுவ அதிகாரி உதி ஆடம் தெரிவித்தார்.

லெபனானின் கடலோர நகரமான டயரை ஆக்கிரமிக்க இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது என்று ஹிஸ்புல்லா இயக்கம் அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் இஸ்ரேல் வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். பல படையினர் காயம் அடைந்தனர் என ஹிஸ்புல்லா இயக்கத்தின் அறிக்கை தெரிவித்தது. (202)



## சீனாவில் புயல் தாக்கி 48 பேர் உயிரிழப்பு!

சீனாவின் தெற்குக் கடல் பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்பு பிரட்பிரூன் என்ற புயல் உருவானது. இந்தப் புயல் வலுவடைந்து குவாங்டாங் மாகாணத்தில் கடற்கரையோரப் பகுதிகளைப் பயங்கரமாகத் தாக்கியது. இதில் 48 பேர் பலியாகியுள்ளனர்.

கடலில் ராட்சத அலைகள் எழுந்து கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. கடலோரப் பகுதிகளில் உள்ள தாய்ஹான், என்பிங், யாசுன் உட்பட நூற்றுக்கணக்கான கிராமங்கள் கடல் நீர் புகுந்து மூழ்கின. தொடர்ந்து பலத்த மழையும் பெய்தது. பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. புயல் தாக்கியதில் கடலோர கிராமங்களில் இதுவரை 48 பேர் பலியானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் 14 பேரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

## தீக்காயங்களை ஆற்றும் மரபணுக்கள்

மனிதனுக்கு உடலில் ஏற்படும் காயங்களை குறிப்பாக தீக்காயங்களை எளிதில் குணமாக்கும் சக்தி வாய்ந்த இரு மரபணுக்களை மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த அபர்தீன் பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியர் மின் ஜாவோ, மரபணு பற்றி ஆராய்ந்து புது முடிவுகளை கண்டுபிடித்துள்ளார். உடலில் உள்ள மின்மய செயற்பாடுகளை தூண்டிவிட்டு, அதன் மூலம் குறிப்பிட்ட இரு செல்களை திசை மாற்றி, காயங்களை ஆறவைக்க முடியும் என்று கண்டறிந்துள்ளார். (202)

## லெபனானுக்கான ஐ.நா.உதவி கிடைப்பதில் பெரும் தாமதம்

லெபனான் நாட்டில் இஸ்ரேல் குண்டுவீச்சுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நாவின் மனிதாபிமான உதவி கிடைப்பதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

சிரியாவுக்கும் லெபனானுக்கும் இடையிலான சாலையை இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுவீசி நாசப்படுத்திவருகின்றன. ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கு சிரியாவிலிருந்து அவசியப் பண்டங்கள் கிடைப்பதைத் தடுக்க இஸ்ரேல் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இஸ்ரேல் போர் விமானங்கள் கடந்த சனிக்கிழமை 7மணி நேரம் தொடர்ந்து தாக்குதல் நடத்தியதால் ஐ.நா.மனிதாபிமான உதவிகளை லெபனானில் விநியோகிக்க இயலவில்லை.

இதேவேளை- லெபனான் இராணுவத்திற்கு அமெரிக்கா 45 கோடி இந்திய ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

ஹிஸ்புல்லாத் தீவிரவாதிகளை ஒடுக்க இந்த நிதியுதவியை அமெரிக்கா வழங்குகிறது. இராணுவத்திற்கு ஆயுத உதிரிப்பாகங்களை வாங்குவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் ஈரான் நாட்டின் ஆதரவுடன் செயற்பட்டு வருகின்றனர். லெபனானின் தென்பகுதியில் பதுங்கியிருந்து இஸ்ரேல் நாட்டுக்கு எதிராகப்பயங்கரவாத செயல்களை மேற்கொண்டு வருகின்றனர்.(202)

உலக அரங்கில்

# இலங்கை பொலிஸாருக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் பயிற்சியளிக்கக்கூடாது

### இந்தியப் பிரதமரிடம் வைகோ வலியுறுத்து

இலங்கைக் காவல்துறைக்கு இந்தியாவில் வேறு எந்த இடத்திலும் பயிற்சியளிக்கக் கூடாது என்று பிரதமர் மன்மோகன்சிங்கிடம் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கேட்டுள்ளார்.

தற்போது கோயம்புத்தூரில் இருந்து சிங்கள காவல்துறையினர் அனுப்பப்பட்டுவிட்டாலும் அவர்களுக்கு இந்தியாவில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுவதாக அறிகிறேன். இந்தியாவில் எந்த இடத்திலும் பயிற்சி அளித்தாலும் அது தமிழர்களின் உள்ளத்தைப் புண்படுத்தும் செயல் ஆகும். எனவே, இந்தியாவில் அவர்களுக்கு வேறு எங்கும் பயற்சி அளிப்பது நிறுத்தப்படவேண்டும் என்று வைகோ கேட்டுக்கொண்டார்.

நிகழ்வொன்றில் வைகோ உரையாற்றுகையில், இலங்கைப் போரில் தமிழர்கள் குண்டு ஏந்தினால் வாழ்த்தி வரவேற்போம்.

கடந்த 50 ஆண்டுகளாக தங்களை அடிமைப்படுத்தி வரும் இனவெறி அரசுக்கு எதிராகத் தமிழர்கள் போராடி வருகின்றனர். இதைப் பயங்கரவாதமென்று எப்படிக் கூறுவது?

இலங்கை துருப்புகளை ஏற்றிச் செல்லும் போர்க்கப்பலும் தாக்கப்படுகிறது. பனை மரத்தைச் சாய்த்து வைத்து பீரங்கிகள் என்று எதிரிகளை ஏமாற்றிய காலம் உண்டு. தற்போது நிஜ பீரங்கிகள் அவர்கள் வசம் இருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது - என்றார் அவர். (202)

## கொக்காகோலா, பெப்சி குளிர்பானங்கள் பாதுகாப்பானவை என நிறுவனம் உறுதி

·புதுடில்லி, ஓக.7

கொக்காகோலா மற்றும் பெப்சி குளிர்பானங்கள் பாதுகாப்பானவை என அந்நிறுவனங்கள் உறுதியளித்துள்ளன.

இந்தியாவின் மகாராஷ்டிரத்தில் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் பெப்சி, கொக்காகோலா விற்பனைக்குத் தடை விதித்துள்ளது அம்மாநில அரசு.

இந்த பானங்களில் பூச்சிக்கொல்லி மருந்து அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் உள்ளதாக எழுந்த முறைப்பாட்டையடுத்து மேற்கண்ட நடவடிக்கையை மாநில அரசு எடுத்துள்ளது.

உலகம் முழுவதிலும் உள்ள 200நாடுகளில் அந்தந்த நாடுகளின் உள்ளூர் விதிகளுக்கு ஏற்ப சர்வதேச தரத்தில் கொக்கா கோலா நிறுவனம் குளிர்பானங்களைத் தயாரித்து விற்பனை செய்துவருகிறது.

கொக்காகோலா, பெப்சி ஆகிய 2 நிறுவனங்களும் தயாரித்து விற்பனை செய்யும் 11 பானங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் பூச்சிக்கொல்லி மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (சிஎஸ்இ) அறிவித்ததை அடுத்து, இந்த 2 நிறுவனத்தின் குளிர்பானங்களையும் தேசிய அளவில் தடைசெய்யுமாறு எம்.பி.க்கள் கோரிக்கை விடுத்தனர்.

சிஎஸ்இயின் கூற்று தவறு என்று கொக்காகோலா நிறுவனம் கூறுகிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் கொக்காகோலா பானங்கள், சர்வதேச அளவில் பிரபலமான லண்டனில் உள்ள சிஎஸ்எல் ஆய்வகத்தில் தொடர்ந்து சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. அச்சோதனைகளில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் பூச்சிக்கொல்லி மருந்துகள் குளிர்பானங்களில் சேர்க்கப்பட்டதாகக் கூறவில்லை.

எங்களது மறுப்பை உரிய ஆதாரங்களுடன் இந்திய அரசுக்குத் தெரிவித்துள்ளோம் என்கின்றது அந்நிறுவனம். (202)

## ஈழத்தமிழ் அகதிகள் தமிழகத்தில் கைதி, அடிமைபோல் நடத்தப்படுகின்றனர்

### ம.தி.மு.க. குற்றச்சாட்டு

இராமநாதபுரம்,ஓக.7


இராமேஸ்வரம் மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள ஈழ அகதிகள் கைதிகள் போலவும் அடிமைகள் போலவும் நடத்தப்படுகின்றனர் என ம.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் குழு முறைப்பாடு தெரிவித்துள்ளது.

ம.தி.மு.கவைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் 5 பேர் அக்கட்சியின் மாநில துணைப்பொதுச் செயலாளர் மல்லை சத்தியா தலைமையில் மண்டபம் அகதிகள் முகாமைக் கடந்த சனிக்கிழமை பார்வையிட்டனர். பின்னர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மண்டபம் முகாமில் உள்ள அகதிகளுக்குப் போதுமான வசதிகள் செய்யப்படவில்லை. அவர்கள் வீட்டுக்கு ஒரு விளக்கு மட்டுமே உள்ளது. எந்த வீட்டிலும் மின் விசிறி இல்லை. பெண்களுக்குப் போதுமான கழிப்பறை வசதிகள் இல்லை. 5 ஆயிரத்து 300 அகதிகள் உள்ள முகாமில் உள்ள மருத்துவமனையில் 20 படுக்கைகள் மட்டுமே உள்ளன.

ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க தமிழக அரசு தவறிவிட்டது.

இலங்கை பொலீஸ் அதிகாரிகளுக்கு இந்தியாவில் எந்த மாநிலத்தில் பயிற்சி கொடுத்தாலும் அனை அனுமதிக்க மாட்டோம் - என்றனர் அவர்கள். (202)



1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா நகரம் மீது அமெரிக்கா அணு குண்டு வீசித் தாக்கியதில் நகரமே சின்னாபின்னமானது. அணுகுண்டு வெடிப்பதற்கு முன்பு மோட்டாயாவ் நதியில் ஹிரோஷிமாவின் எழில்மிகு கட்டடங்கள் பிரதி பலிப்பதை கம்பியூட்டர் உதவியுடன் வரைபட்ட 'கிரபிக்ஸ்' படம் சித்திரிக்கிறது.

## 40 அடி ஆழக் கிணற்றில் மாமனால் தள்ளப்பட்ட எட்டு வயதுச் சிறுவன் 24 மணிநேரத்தில் மீட்பு!

பெங்களூர்,ஓக.7

பெங்களூரில் 40 அடி ஆழக் கிணற்றில் மாமனால் தள்ளப்பட்ட 8 வயதுச் சிறுவன் 24 மணிநேரத்தின் பின் தீயணைப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளான்.

பெங்களூரைச்சேர்ந்த சிலம்பரசன் என்னும் 3ஆம் வகுப்பு மாணவனே இவ்வாறு மீட்கப்பட்டான்.

வீட்டில் இருந்த சிலம்பரசனை,நேற்றுமுன்தினம் மாலை அவனுடைய மாமா அழைத்துச் சென்றார். அவர் ஒரு பாழடைந்த கிணற்றில் சிலம்பரசனைத் தள்ளிவிட்டு தப்பி ஓடிவிட்டார். கிணற்றில் தண்ணீர் இல்லாதபோதும் சிறுவனுக்குப் பெரிதாக அடிபடவில்லை. காலில் மட்டும் சிறிது காயம் ஏற்பட்டது.

விழுந்ததும் சுதாகரித்துக்கொண்டு எழுந்த சிறுவன், பயத்தில் அலறினான். உதவி கேட்டு அபயக்குரல் எழுப்பினான் . ஊருக்கு ஒதுக்குப் புறமாகக் கிணறு இருந்ததால் அவனுடைய குரல் யாருக்கும் கேட்கவில்லை. தொண்டை வற்றக் கத்திக்கத்தி சோர்ந்து போனான்.

மறுநாள் பொழுதுவிடிந்தது. நம்பிக்கையுடன் உதவி கேட்டு குரல் எழுப்பினான். அந்தப் பக்கம் வந்த சிலர் சிறுவனின் குரலைக் கேட்டனர். உடனடியாகப் பொலிஸுக்குத் தகவல் தெரிவித்தனர். பொலிஸார் விரைந்து வந்ததுடன், தீயணைப்புப் படையினருக்குத் தகவல் தெரிவித்தனர். அவர்கள் விரைந்து வந்து கிணற்றில் இருந்து சிறுவனை மீட்டனர். அதிர்ச்சி அடைந்திருந்தாலும் என்ன நடந்தது? என்று சிலம்பரசன் மெதுவாக விவரித்தான்.

மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர், உடல் நிலையும் பரிசோதிக்கப்பட்டது. சிறுவன் நலமாக இருப்பது உறுதிசெய்யப்பட்டதும் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

சிலம்பரசனைக் கிணற்றில் அவனுடைய மாமா தள்ளியது ஏன்? என்று தெரியவில்லை. அவரைப் பொலிஸார் வலை வீசித் தேடி வருகின்றனர். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் செப்ரிசீமியாவால் சிறுமி மரணம்

கிளிநொச்சி,ஓக.7

செப்ரிசீமியா நோய்த்தாக்கம் காரணமாகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்த சிறுமி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மரணமானார்.

கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த உ.சரணியா (வயது-04) என்ற சிறுமியே செப்ரிசீமியாவால் மரணமானார். இவர் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (1-204)

## வரணி வடக்கில் வீடமைப்பு பயனாளிகளுக்கு உலர்உணவு விநியோகம்

தென்.கிழக்கு,ஓக.7

வரணி வடக்கு குறன்டிப்பிட்டிப் பிரதேசத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புப் பயனாளிகளுக்கு உலர்உணவு அண்மையில் வழங்கப்பட்டது.

முதற்கட்ட கட்டுமான வேலைகள் பூர்த்தியடைந்த சுமார் 25 குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி போன்ற உலர்உணவுப் பொருள்கள் வடவரணி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கிளையில் வைத்து வழங்கப்பட்டன.

கட்டுமான செலவுக்கு ஈடான தொகைக்கு இவ்வுலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாக பயனாளிகள் தெரிவித்தனர். (1-122)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Dorbermann Pincher நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 116, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P.:0777554528 (சி/50688)

### விற்பனைக்கு

222 இலக்கமுடைய RRL தொலைபேசி இணைப்பும், தொலைத்தொடர்பு நிலையத்துக்குத் தேவையான பொருள்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:0777 738012, 0777 738013 (53019)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 13 சிறீ xxx தொடரிலக்கமுடைய லான்சர் B மொடல் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:222 3525 (53008)

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி வைத்தியசாலைக்குப் பின்புறமாகவும் கியூடெக் நிறுவனத்திற்கு அருகிலும் 6 அறைகள், வீட்டோடு சேர்ந்த கொமட், குளியலறை, வாகனத்தரிப்பிடம், மின்சார வசதி, முழுமையான மொட்டைமாடி கொண்ட வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: T.P.:0712518322 ப.மூர்த்தி, திருநகர் வடக்கு, கிளிநொச்சி. (சி/50661)

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் எல்லா வசதிகளுடனும் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனம்/ பெரிய குடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு: T.P.:0777032667 (53003)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் 09-08-2006 விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை, தாரகை-பருத்தித்துறை, றாஜ் ஸ்ரோர் - நெல்லியடி, P.ரவி- சாவகச்சேரி, தாசன்பாம் - கோயில் வீதி, நல்லூர், மதுரா-227, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். நாகம்ஸ் பாம் - வட்டுக்கோட்டை, றஞ்சீத் -517, ஸ்ரான்லி வீதி, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு மற்றும் அனைத்து கால்நடைச் சங்கக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். T.P.:222 2867, 222 3529 (52990)

### தவறிவிட்டது

1066, கண்டிவீதி, திருகோணமலையைச் சேர்ந்த பாலபரமேஸ்வரன் ஜீவிதன் என்பவருடைய தே.அ.அ.(852132329V) திருநெல்வேலி சந்தையில் (30-07-2006) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஜீவிதன், காளி கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (53017)

வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி, கொட்டடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை, சுதானந்தி என்பவரது தே.அ.அ.(688642671V) முகமாலை பஸ்சில் (05-08-2006) அன்று தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் வில்லூண்டிப் பிள்ளையார் கோயிலடி, சோலைபுரம் வாசிகசாலையில் ஒப்படைக்கவும். (53022)

## கைதடி வளர்மதிக்கு புதிய கட்டடம்

கைதடி,ஓக.7

கைதடி மத்தி வளர்மதிசனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா கடந்த வாரம் நிலையத் தலைவர் சி.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை வளர்மதி சனசமூக நிலையத்தின் மூத்த உறுப்பினரும் முன்னாள் தலைவருமாகிய சி.திரவியம் நட்டார்.

2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த நடவடிக் கையின் போது இச் சனசமூக நிலையத்தின் கட்டடம் பாரிய சேதத்திற்குள்ளானது குறிப்பிடத்தக்கது. (1-75)


### UNIVAC

Vb.Net,C++ கற்பிக்கக்கூடிய விரிவுரையாளர் உடன் தேவை.

213, 2 ஆம் மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776 176476


## 31ஆம் நாள் நன்றி செலுத்தும் வழிபாடு



கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த

**டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை**

அவர்களின்

31ஆம் நாள் நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (07-08-2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். இவ் வழிபாட்டிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்திரா லொஜ்,
வரணி. (53023)(26.17) -குடும்பத்தினர்.


### ABARNA CHEMISTRY CENTRE
மந்திகை, புலோலி

A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான அலகு ரீதியான மீட்டல் வகுப்பு

ஆரம்பம் : 09-08-2006 புதன்கிழமை 4 p.m.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வகுப்புகள்
2008 Batch இற்கு :- Bond, Basic Chemistry
2007 Batch இற்கு :- Organic - Theory
Inorganic - Paper

ஆசிரியர்:- Mr.V.Parameswaran (B.Sc.,Dip.in.Edu.)
தொடர்புகளுக்கு:- 0776169936 (சி/50687) (26.17)


## துயர் பகிர்கின்றோம்



திருமதி

**கணபதிப்பிள்ளை பாக்கியரெத்தினம்**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாக்கியரெத்தினம் அவர்கள் 04-08-2006 இல் கொழும்பில் காலமானார் என்ற செய்திகேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரது இழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவர்களின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்திக்காக நயினை அம்பாள் அருள் வேண்டிநிற்கின்றோம்.

*56, மருதடி வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

மாணிக்கம் இராசேஸ்வரன்
குடும்பத்தினர்.
(வேல்முருகன் வணிக நிலையம்)

(53021)(26.17)

## மரண அறிவித்தல்



**கந்தையா நடராஜா**

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட லிகிதர்)

கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராயைச் சேர்ந்த கந்தையா நடராஜா நேற்று (06-08-2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும் நித்தியவரதன் (சுவிஸ்), நித்தியவேணி, பத்மராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பவானி, கணேஸ்வரன், சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (07-08-2006) திங்கட்கிழமை முற்பகல்10 மணிக்கு செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**3ஆம் கட்டை,**
**பருத்தித்துறை வீதி,**
**கல்வியங்காடு.** (53025)(11.17.26)

தகவல்:
ந.கணேஸ்வரன் (சிவம்).


### GIT கருத்தரங்கு
A/L 2007 மாணவர்களே

நல்லூர் லயன்ஸ் கழக ஆதரவில் IBMS நடாத்தும்

இலவச கருத்தரங்கு

இடம் : IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna
காலம் : 09.08.2006 புதன்கிழமை
08.30 மணி முதல் 03.30 மணி வரை

A/L மாணவர்கள் அனைவரும் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

மேலதிக விபரங்களுக்கு :

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
# 209, Manipay Road, Jaffna. T.P NO : 021 222 8232



### PC Park
partner of computer people

அதிரடி விலைக்கழிவு......

3.06GHz LGA P4 ka=50000.00
"Intel 865/ 80GB Sata HDD/256MB Kingston/128MB VGA/CD Rom/15'View Sonic/FDD"

Motherboards-ASUS (3 Years Warranty)
P5GDC-Deluxe Intel 915P Express Chipset(LGA775) =Rs23000.00
P5GDL-Pro Intel 915 Chipset(LGA775) =Rs20000.00
P5PL2-Intel 945+PL Chipset (LGA775) =Rs18000.00
P5P800S Intel 915 Chipset(LGA775) =Rs11000.00
P5P800-MX Intel 915 Chipset(LGA775) =Rs8000.00
P4V8X-MX Via 8237R Chipset(478) =Rs6500.00
K8v-MX (AMD) =Rs10000.00

VGA Cards-ASUS (3 Years Warranty)
9400 64MB VGA =Rs4500.00
9250 128MB VGA =Rs7500.00
128MB PCI Express Rs=9000.00

Monitors-View Sonic (3 Years Warranty)
15"(Black)- 11250.00
17"(Black)- 15750.00

Memory [Ram]-Kingston (1 Year Warranty)
256 MB(400MHz) =3700.00
512 MB(400MHz) =6500.00
DDR 2-512 MB(533MHz)=7500.00

Optical Drive-Sony (1 Year Warranty)
CD ROM =2000.00
CD Writer =3300.00
Combo Drive =4700.00
DVD ROM =3200.00
DVD Writer =6600.00
-Asus
CD ROM =2000.00
CD Writer =4000.00
Combo Drive=5000.00
DVD ROM =4000.00
DVD Writer =7500.00

Floppy Drive-Sony=850.00 (1 Year Warranty)

Mouse
Logitec =550.00
Sony-Optical USB =1200.00
Optical Mouse =600.00

Speaker
Perx-460 W =500.00
SBS Creative =1500.00

Keyboard
Perx =400.00
M.M Keyboard =600.00

Modem (1 Year Warranty)
Internal-Smart link =900.00
-Conexentb =1000.00

TV Tuner (1 Year Warranty)
TV Tuner Combo =4000.00
Pixel view Pro2 =5500.00
E Pro =4500.00

UPS (2 Years Warranty)
Power tree-650V =4000.00
Mercury Power =4500.00
Mercury Smart =5000.00

Printer (1 Year Warranty)
Epson LQ300+ =21750.00
HP Laser 1020 =17500.00
Cannon IP1000 =5500.00

Scanner (1 Year Warranty)
HP2400C =10500.00

External Hard Disk Casing
External Hard Disk Casing 3.25' =3500.00
External Hard Disk Casing 5.5' =4500.00
External Hard Disk Bay (USB) =3000.00

Power supply (1 Year Warranty)
Intex 450W =1300.00
Mercury 450W =1500.00

Screen Filter
Screen Filter 15' =250.00
Screen Filter 17' =600.00

USB Converters 600.00

ATX Casing3000.00 to 4000.00 (1 Year Warranty)

Flash Drive (1 Year Warranty)
256Mb Flash Drive Kingston-Rs2000.00
512Mb Flash Drive Kingston-Rs3000.00
1GB Flash Drive Kingston-Rs4000.00

HDD (3 Years Warranty)
80 gb Sata (7200.rpm.) - 6500
80 gb IDE (7200.rpm.) - 6300
164 gb Sata (7200.rpm.) - 12500
200 gb Sata (7200.rpm.) - 13500



குறைந்த விலை நிறைந்த தரம்
இதுவே எமது இலட்சியம்

Pc Park
633.k.k.s Road.
Jaffna.
Tp-021 2229581
Web-www.pcparksl.com
Email-info@pcparksl.com
Hotline-0773068998


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வங்கியாளர் பொன். கணேசமூர்த்தியின் புகழுடல் தாங்கிய ஊர்திக்கு முன்பாக வங்கியாளர்கள் அணிவகுத்து வருவதையும் கொக்குவில் இந்து மயானத்தில் அன்னாரது புகழுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருப்பதையும், சிதைக்கு அவரது துணைவியார் தீ மூட்டுவதையும் படங்களில் காணலாம்.

# பொன். கணேசமூர்த்தியின் புகழுடல் நேற்றுத் தீயுடன் சங்கமமாகியது

யாழ்ப்பாணம், ஓக.7

படுகொலை செய்யப்பட்ட மக்கள் வங்கியின் காங்கேசன்துறை கிளை முகாமையாளரும், பன்முக ஆளுமைகொண்ட படைப்பாளியுமான பொன். கணேசமூர்த்தியின் புகழுடல் நேற்றுத்தீயுடன் சங்கமமாகியது.

முன்னதாக நேற்றுக்காலை 10 மணியளவில் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. இறை வணக்கத்தைத் தொடர்ந்து தெல்லிப்பழை பல.நோ.கூ. சங்கத்தின் தலைவர் சிவமகாராசா தலைமையில் அஞ்சலி உரை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உட்பட மக்கள் வங்கியின் உயரதிகாரிகள், ஏனைய வங்கிகளின் பிரதிநிதிகள் வங்கித் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் அஞ்சலியுரை நிகழ்த்தினர் தொடர்ந்து அன்னாரது புகழுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு அங்கு தீயுடன் சங்கமமானது.

அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்விலும் இறுதியாத்திரையிலும் வங்கிகளின் ஊழியர்கள் படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்கள், கலாமன்றங்களின் பிரதிநிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். (13)

# மூதூரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.சி.ஆர்.சி. போக்குவரத்து உதவி

கொழும்பு, ஓக.7

மோதல் காரணமாக மூதூரில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு, பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், உள்ளூர்ச் செஞ்சிலுவைச் சங்க இயக்கத்துடனும் மற்றும் இதரமனிதாபிமான அமைப்புகளுடனும் இணைந்து மூதூர் பகுதிக்கு வாகன அணியொன்றை அனுப்பி பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல நிவாரணப் பணிகளுக்கு உதவியி ருக்கிறது.

ஆறு ட்ரக்குகள், இரண்டு அம்புலன்ஸ்கள், மூன்று கார்கள் என்பன இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள், மூதூரிலிருந்து சுமார் 400 பேரை திருகோணமலை நகருக்கு இந்த வாகனங்கள் மூலம் ஏற்றிச் சென்று போக்குவரத்துக்கு உதவியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ்கள் மூலம் ஈச்சிலம்பற்று வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கந்தளாயில் இப்பொழுது 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதி முகாம்க ளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர் களுக்கு வேண்டிய சுகாதார, குடி தண் ணீர்த் தேவைகள் குறித்து ஐ.சி.ஆர்.சி. விப ரம் திரட்டி வருகிறது. இதேவேளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் உணவு வழங்கி இவர்களுக்கு உதவி வருகிறார்கள். இவ்வாறு ஐ.சி.ஆர்.சி. செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

## கண்காணிப்பு குழுவினர் திருமலையில் பணி தொடங்கினர்

கொழும்பு,ஓக.7

மூதூரில் இடம்பெற்ற மோதல்களையடுத்து இடைநிறுத்தப்பட்டிருந்த திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலக நடவ டிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

இவ் அலுவலகம் திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
இன்று முதல் டிஷ்யூம் புகழ் ஜீவா, கோபிகா, மோகன்லால் மற்றும் பலர் நடித்த
அரண்
10.30, 2.30, 6.30 மட்டும்



ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட்பட்டேல்
சம்திங் சம்திங்
உனக்கும் எனக்கும்
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-471391)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 - 08 - 1959 | 08 - 07 - 2006 |



### திருமதி கிருஷ்ணசாமி விஜயசுந்தரி

ஆறாத துயர் தந்து
மீளாது துயில் கொண்டாலும்
மறவாதே உமது பாசம்
எந்நாளும் எம்முன்னே
உத்தமியே வாழ்கின்றீர்!

எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து உதவிய அயலவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும். தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தோருக்கும் உதவிகள் புரிந்த யாவருக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (07.08.2006) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.6A, செட்டித் தெரு, நல்லூர். குடும்பத்தினர்.

# மீண்டும் முரளியின் கைவரிசை!

கொழும்பு, ஓக. 07

முத்தையா முரளிதரன் மீண்டும் ஒரு தடவை தன் மந்திர சுழல் பந்து கைவரிசையைக் காட்ட, தென்னாபிரிக்க அணி இரண்டாம் இன்னிங்ஸில் ஓட்டங்களைப் பெறத் திணறுகின்றது. முக்கிய நான்கு வீரர்களை முரளிதரன் 'பெவிலியனு'க்குத் திருப்பிவிட முதல் இன்னிங்ஸைவிட சோர்ந்துபோன நிலையில் இருக்கிறது தென்னாபிரிக்கா.

இரண்டு டெஸ்ட்களைக் கொண்ட இந்தத் தொடரின் இறுதி டெஸ்ட் ஆட்டம் சரவணமுத்து மைதனாத்தில் நடைபெறுகின்றது. நேற்று ஆட்டத்தின் மூன்றாவது நாள். தென்னாபிரிக்க வீரர்கள் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 257 ஓட்டங்களைப் பெற்றனர்.

முன்னதாக இரண்டாவது நாளில் தனது முதலாவது இன்னிங்ஸை ஆடிய இலங்கை அணி 321 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இது தென்னாபிரிக்காவின் முதல் இன்னிங்ஸைவிட 40 ஓட்டங்கள் குறைவாகும். பிரபலமான முன்வரிசைத் துடுப்பாட்ட வீர்கள் அனைவரும் சொதப்பிவிட இலங்கையைக் காப்பாற்றித் தூக்கி நிறுத்தியவர்கள் பின்வரிசைப் பந்துவீச்சாளர்களே.

துடுப்பாளர்களில் ஹப்புக்கெதர (63) மட்டுமே அரைச் சதம் தாண்டினார். ஜெயசூரிய 47 ஓட்டங்களை மட்டும் பெற்றார். ஒரு கட்டத்தில் 86 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து இலங்கைஅணி தட்டுத் தடுமாறியது.

பின்வரிசையில் வந்த வீரர்கள் ஓரளவு நிலைத்து நின்று விளையாடினர். இவர்களில் சமர கபுகெதர - பிரசன்ன ஜெயவர்த்தனா (42) இணை 105 ஓட்டங்களைப் பெற்றது. தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஆறாவது விக்கெட் இணைப்பாட்டத்தில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். அடுத்து வந்த பர்வேஷ் மஹ்ரூப் (56)- சமிந்த வாஸ் (64) இணையும் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த இணை 117 ஓட்டங்களைப் பெற்று அணி 300 ஓட்டங்களைத் தாண்ட உதவியது.

தொடரைகொள்ளையடித்து விட வேண்டும் என்ற இலங்கையின் கனவிற்கு நிற்னி மற்றும் ஸ்ரெயின் ஆகியோர் உலை வைத்தனர். ஸ்ரெயின் 5 விக்கெட்டுக்களையும் நிற்னி 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்த, தென்னாபிரிக்காவின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களை எட்டுவதற்கு முன்னரே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது இலங்கை அணி.

இரண்டாவது நாள் மாலையிலேயே தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்து விட்டது. நேற்றுக் காலை தொடர்ந்து ஆடிய அந்த அணியால், முதல் இன்னிங்ஸ் போன்று ஓட்டங்களைப் பெறமுடியவில்லை. மிக மந்த கதியிலேயே ஓட்டங்கள் பெறப்பட்டன.

ஆரம்பத் துடுப்பாளராகக் களமிறங்கிய கிப்ஸ் சிறப்பாகச் செயற்பட்டு 92 ஓட்டங்களைப் பெற்றார். இந்தத் தொடரில் தென்னாபிரிக்க வீரர்கள் எவருக்கும் சதம் அடிக்கும் அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை. முதல் இன்னிங்ஸில் டி வில்லியர்ஸ் 95, முதல் டெஸ்டில் ருடோல்வ் 90 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்திருந்தனர்.




தென்னாபிரிக்காவின் இரண்டாவது இன்னிங்ஸில் கிப்ஸ் தவிர வேறு எந்த துடுப்பாளரும் சிறப்பாகச் செயற்படவில்லை. எவ ரும் அரைச் சதத்தைக்கூட எட்டவில்லை. தேநீர் இடைவேளை வரை விக்கெட் வீழ் வதை தென்னாபிரிக்கா தாக்குப் பிடித்து தடுத்தது. எனினும் மாலையில் அவை மள மளவெனச் சரிய ஆரம்பித்தன. முரளிதரனின் சுழலில் சிக்கி தூக்கி வீசப்பட்டனர். முதலாவது இன்னிங்ஸிலும் முரளிதரன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆட்டநேர முடிவின் போது தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 257 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. போஜே 5 ஓட்டங்களுடனும் பௌச்சர் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குவீனி கமலாவதி ஜெயராஜா

சுண்டுக்குளியை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி குவீனி கமலாவதி ஜெயராஜா 05.08.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் E.J. அரியரத்தினம் ஜெயராஜாவின் (ஓய்வுபெற்ற லிகிதர் - கச்சேரி யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், நோயல் நிமலராஜன் (கொழும்பு), ஏஞ்சலின் நிமலினி (ஆசிரியை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற S.E. நவரத்தினராஜா மற்றும் இரத்தினாவதி பத்மாவதி, S.B. கருணாராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயராணி (மலேசியா), இன்பராணி, B.S.A. அரியரத்தினம் காலஞ்சென்ற அரியகுமார் மற்றும் இராசகுமார், இராசரட்ணம் காலஞ்சென்றவர்களான திருமதி செல்வரஞ்சிதம், சபாரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், நிசாந்தி நிமலறாஜனின் (ஆசிரியை - சென். தோமஸ் கல்லூரி கொல்பிற்றி) மாமியும் ஏரோன் றோவோனின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.08.2006) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சென். ஜோன்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10, பேரின்பநாயகம் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (53026)

தகவல்:
E.J.A. ஜெயராஜா
(கணவர்).

### சதாசிவம் பஞ்சாட்சரம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் பஞ்சாட்சரம் நேற்று (06-08-2006) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் தவமணியின் அன்புக் கணவரும்,ஜெயந்தி மாலா, பராசக்தி, சாந்திமலர், சுமுதினி, பவானி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் நடேச பிள்ளை, பூவேந்திரராசா, வாமதேவன், இராமநாதன், குணசீலன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (07-08-2006) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (53026)

தகவல் :
வை. இராமநாதன்(இராமு)
மருமகன்,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யுத்த நிறுத்தத்தை ரத்துச் செய்வது உட்பட

# 20 நிபந்தனைகளையும் ஏற்றால்தான் அரசுடன் ஜே.வி.பி. இணையுமாம்!

## இல்லையென்றால் அது நடவாது என்கிறார் சோமவன்ஸ

கொழும்பு, ஓகஸ்ட் 07

போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்ய வேண்டும்; தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்பன உட்பட ஜே.வி.பி. முன்வைத்துள்ள 20 கோரிக்கைகளையும் அரசு ஏற்றுக் கொண்டால் அரசில் இணைந்து கொள்ளத் தயார் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப் படாத பட்சத்தில் அரசுடன் ஜே.வி.பி. ஒரு போதும் இணையாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

"இருபது கோரிக்கைகளையும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசிடம் சமர்ப்பித்து இருக்கிறோம். குறித்த இருபது கோரிக்கைகளையும் அரசு முழுமையாக ஏற்றுக் கொண்டால் அமைச்சுப் பதவிகள் எவற்றையும் ஏற்காமல் அரசில் இணைவது என எமது கட்சியின் அரசியல் பீடம் தீர்மானித்துள்ளது.

இலங்கையின் இறைமை, சுயாதி பத்தியம் போன்றவற்றைப் பாதுகாக்கும் வகையில் புலிகளைத் தோல்வியடையச் செய்து பொருளாதாரத்தின் பிரதி லாபங்களை அனைத்து அமைச்சுளுக்கும் பகிர்ந்தளிப்பதே எமது கோரிக்கைளின் உள்ளடங்கல்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் ஜன நாயகத்தை ஏற்படுத்தல், இராணுவ மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகளைப் பலம் பெறச் செய்தல், அத்துடன் ஆசிய நாடுகளுடன் மாத்திரம் தான் இராஜதந்திர உறவுகளை மேற்கொள்ளல் வேண்டும் என்றும் நாம் கோரியிருக்கின்றோம்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற பிரதேசங்களை விடுவிக்கவேண்டும், வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்த வேண்டும். அரசின் அமைச்சரவை உறுப்பினர்களை 30 ஆக மட்டுப்படுத்த வேண்டும் என்றும் நிபந்தனை விதித்திருக்கிறோம்."

- என்றும் சோமவன்ஸ் தெரிவித்தார். (த)

# யுத்த வழியில்தான் தீர்வு என்றால் புலிகளும் அதற்குத் தயார்தான்!

## ரம்புக்வெலவுக்கு எழிலன் பதிலடி

கொழும்பு,ஓக.07

மாவிலாறு அணைப்பிரச்சினைக்கு பேச்சை நிராகரித்து யுத்தத்தினூடாகத் தான் தீர்வு காண்போம் என்று ஸ்ரீலங்கா அரசு மேற் கொண்டிருக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகளும் அதேவழியில்தான் தீர்வு காண்பர் என்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான புலிகளின் குரலுக்கு நேற்று எழிலன் வழங்கிய செவ்வியில் தெரிவித்த தாவது:-

பிற்பகல் 2.30 மணியளவில் நாங்கள் அணைக்கட்டுக்கு அருகில் சென்றபோது அந்தப் பகுதியில் எறிகணைகள் வீசப்பட்டன. கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அருகிலே கூட ஓர் எறிகணை வீழ்ந்து வெடித்தது. உடனே அருகிலிருந்த பதுங்குகுழி ஒன்றில் அவரைப் பத்திரமாக அழைத்துச்சென்று நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்தோம். ஆனால், ஏராளமான எறிகணைகள் தொடர்ச்சியாக வீழ்ந்தமையால் அவரை அங்கு வைத்திருப்பது. பாதுகாப்பானது அல்ல என்று அவரது இடத்திற்கு அனுப்பினோம்.

இப்படியான ஒரு துரதிர்ஷ்ட்வசமான நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று அவர் மனம் வருந்திக்கொண்டு தன்னுடைய இடத்திற்குத் திரும்பினார். யுத்தித்தினூடாகத்தான் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமென்று அவர்கள் தாக்குதல்களை நடத்துகின்றபோது பேச்சினூடாகத் தீர்க்கமுடியாது என்ற சூழ்நிலையில் நாங்களும் அதேவழியைத்தான் தொடரவேண்டிய நிலையில் உள்ளோம்.

இராணுவ ரீதியில் தாக்குதல் நடத்தியே அணையைத் திறப்போம் என்று ஸ்ரீலங்கா அமைச்சர் ரம்புக்வெல கூறியிருக்கின்றார். நாங்களும் அதற்குத் தயார்தான் - என்றார் எழிலன். (த-12)

## ஆற்றை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் மாவிலாறு நோக்கி மேற்கொண்ட எறிகணை வீச்சினால் பதுங்கு குழிகளுக்குள் பதுங்கியிருந்துவிட்டு மயிரிழையில் தப்பிப் பிழைத்து திரும்பி வந்திருந்த அவர், அது தொடர்பாக சர்வ தேச ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித் தார்.

நாங்கள் மாவிலாற்றுப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு இன்று அணையைத் திரும்பத் திறக்கமுடியும் என்று நினைத்தோம். அணைக் கட்டைத் திறப்பதற்கு கண்காணிப்புக் குழுவினராகிய நாங்கள் அப்பகுதிக்குச் சென்ற போது, வேறுயாரோ, வேறு ஏதாவது ஒரு தீர்ப்பை வைத்திருந்தது மாதிரி திடீரென அங்கு ஷெல் அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதனால், நாங்கள் அங்குபோக முடியவில்லை. கடைசியில் நாங்கள் பேசி சமரசம் செய்துவைத்திருந்த தீர்வு கைவிட்டுப்போய் விட்டது." என்றும் கண்காணிபப்க் குழுவின் தலைவர் ஹென்றிக்ஷன் கூறினார்.

"நாங்கள் அணைக்கட்டுக்கு சுமார் 2 கிலோமீற்றர் தூரம் வரைக்கும் போய்விட்டோம். அந்த நேரத்தில் ஷெல்லடி ஆரம்பித்துவிட்டது. இனி இந்த விடயத்தில் திரும்பவும் முயற்சி செய்யத்தான் இருக்கின்றோம்.

மாவிலாற்றுத் தண்ணீர் சிங்கள மக்களைச் சென்றடைவதற்காக ஒரு சமாதான வழியில் திரும்பவும் பேச்சு நடத்த நாங்கள் முயற்சி செய்ய இருக்கின்றோம். அந்த முயற்சிக்கு இலங்கை அரசு ஒத்துழைக்கும் என்று நம்புகின்றோம் என்றும் அப்போது குறிப்பிட்டார் உல்ப் ஹென்றிக்ஷன்.

"யாருக்கோ தண்ணீரை விட சண்டைதான் தேவைப்படுகின்றது" என்று விசனத்துடன் தெரிவித்த கண்காணிப்புக் குழுத் தலைவர், "இதனால் மாவிலாறு பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கே பெரும் பின்னடைவு என்றும் சொன்னார். (த - 12)

5ம் ஆண்டிற்குள் கால் பதிப்பதை முன்னிட்டு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses
Ms office
DTP
Hardware
அதிக செய்முறைப் பயிற்சியுடன் கூடிய விளக்கம்
Certificate Courses
Word Power Point
Excel Photo Shop
Access Page Maker
HTML Corel DARW
உங்கள் பதிவுகளுக்கான இறுதி திகதி 08.08.2006
முதல் 100 மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்
CATWAS.COM
Computer Academy
# 26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த இவர் நேற்று பிற்பகல் நிலையத்தில் கடமையிலிருந்தார் என்றும் -

அவ்வேளை- மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி விட்டு தப்பிச்சென்று விட்டனர் என்றும் - கூறப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணை நடத்தியதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

கோப்பாய் கிராம அலுவலரால் நேற்றிரவு 7 மணியளவில் சடலம் யாழ். வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(எ-78-15-72)

## மங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுடன் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் ஒழுங்காக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா சமீபத்தில் தெரிவித்திருந்தது.

அதனையடுத்து, தற்போது அமைச்சர் மங்கள சமரவீர இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்வதால் அவ ரது இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.(த)

## நிபந்தனைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவிலாறு அணை விவகாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்து நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு செவ்வியளித்தார் அமைச்சர் ரம்புக்வெல.

அப்போது அவர் கூறியதாவது:-

பொதுமக்களுக்கு நீர் வழங்குவது என்ற மனிதாபிமான நடவடிக்கையை அரசு எடுத்து வருகின்றது. நாங்கள் அவ்விடயம் தொடர்பாக செயற்பட்டு வருகின்றோம். பொறியியல் வல்லுநர்கள் மதகுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

எங்களது நிலைப்பாட்டை ஏற்கனவே தெளிவாகக் கூறியுள்ளோம். மதகுகளைத் திறப்பதற்கு புலிகள் பெரும் எண்ணிக்கையில் நிபந்தனைகளை விதித்திருந்தனர். ஆரம்பம் முதலே மதகுகளைத் திறப்பதற்கு நிபந்தனைகளை விதிக்கக்கூடாது என்று நாங்கள் கூறிவருகின்றோம். அத்துடன் நீரை ஒரு கருவியாகப் பயன்படுத்தி எந்தவித பேச்சும் நடத்தக்கூடாது.

நீர் என்பது ஒரு பொதுப் பயன்பாட்டு விடயமாகும். பொதுப் பயன்பாட்டு விடயத்தில் நிபந்தனைகளை விதிக்கமுடியாது.

இன்று அவர்கள் ஒப்புக்கொண்டுவிட்டு நாளை அதனை மறுத்தால் அரசுக்குத் தீவிர பிரச்சினை ஏற்படும். ஆகவே பொது விநியோக விடயங்களைப் பொறுத்த வரையில், அரசு தன்னுடைய நிலைப்பாட்டில் இருக்க வேண்டும்.

மதகுகள் திறக்கப்படும். அதற்கான முயற்சியை முன்னெடுக்கவேண்டும். ஏதாவது, ஒரு தீவிரவாத இயக்கம் மக்களைப் பணயமாக வைத்துக்கொண்டு நாங்கள் மதகுகளைத் திறக்கின்றோம் நிபந்தனைகளை நிறைவேற்றுங்கள் என்றும் -

நிபந்தனைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் மதகுகளை மூடிவிடுவோம் என்றும் - கூறுவதை ஏற்கமுடியாது. அது மக்களைப் பணயமாகப் பிடிக்கும் நிலையாகும்.

இறையாண்மைகொண்ட அரசினால் இதனை அனுமதிக்க முடியாது - என்றார் ரம்புக்வெல. (த-12)




## மாவிலாறு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை குறுகிய காலப் பகுதிக்குள் அரசு நிறைவேற்றுவதற்கு நோர்வேத் தரப்பு பொறுப்பு நிற்கும் என்று எட்டப்பட்ட உடன்பாட்டின் படியே அணையைத் திறந்து விடுவதற்குப் புலிகள் இணக்கத்தைத் தெரிவித்தனர்.

ஆற்று நீர் விவகாரம் தொடர்பாக நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன் போவர் அரசு மற்றும் விடுதலைப் புலிகளுடன் பேசி இந்த இணக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்.

நேற்றுக்காலை கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினருக்கும் விசேட தூதுவர் ஹன்ஸன் போவருக்கும் இடையில் எட்டப்பட்ட இறுதி இணக்க ஏற்பாட்டின்படி கால்வாயைத் திறந்துவிடப் புலிகள் சம்மதித்தனர்.

அதன்படி நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு அணைக்கட்டுக் கால்வாயைத்திறக்க ஏற்பாடாகியது.

புலிகளின் தலைவர்களைச் சந்திக்க கிளிநொச்சிக்குச் சென்றிருந்த ஹன்ஸன் போவர் அங்கிருந்தபடியே தொலைபேசி மூலம் கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் தொடர்புகொண்டு கால்வாய் திறப்பது பற்றிய செய்தியை அரசுக்குத் தெரியப்படுத்தினார்.

அதையடுத்து திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன், கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைப் பிரதிநிதி உவே கான்ஸன், புலிகளின் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் புலிகளின் பிரமுகர் புரட்சி ஆகியோரும் அப்பகுதி மக்கள் பிரதிநிதிகளும் மாலை 3 மணியளவில் மாவிலாறில் அணைக்கட்டு அமைந்துள்ள இடத்துக்கு கால்வாயைத் திறந்து விடுவதற்காகப் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் அங்கு சென்றடைந்த கையோடு அப்பகுதியை நோக்கி அரசுப் படைகள் அகோர ஷெல் தாக்குதல்களை ஆரம்பித்தன என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவினர் அணைக் கட்டை நெருங்கிய வேளை அங்கு ஷெல்கள் பொழியப்பட்டன. இதனால், குழுவினர் அங்கும் இங்குமாக ஓடி தரையில் வீழ்ந்து படுத்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நேரிட்டது.

அரச படைகளின் தீவிர ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்ததால் குழுவினர் அங்கிருந்து பாதுகாப்பாகத் திரும்புவதற்கு வழியில்லாத நிலைமை ஏற்பட்டது. தாக்குதல்களை நிறுத்துமாறு கொழும்பிலுள்ள அதிகாரமட்டத்துக்கு தகவல்கள் பறந்தன. எனினும், ஷெல் தாக்குதல்கள் ஓயவில்லை. பின்னர் ஒருவாறு கண்காணிப்புக்குழுத் தலைவரும் ஏனையோரும் அணைக்கட்டுப் பகுதியைவிட்டு வெளியேறினர். (உ-ஐ)

## ஊர்காவற்றுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் இருவரும் தமக்குரிய சம்பளப்பணத்தைப் பெறுவதற்காக கரம்பொன் வீதியூடாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர் என்றும் -

அவ்வேளை பற்றை ஒன்றினுள் இருந்து மோட்டார் சைக்கிளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது என்றும் கூறப் பட்டது.

இச்சம்பவத்தில் சிக்கி தோளில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஜே.கனிஸ்ரன் (வயது 22) என்ற இளைஞர் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றிரவு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கேட்டதையடுத்து தனக்கு தோளில் பலத்த காயம் ஏற்பட்டது என்றும்-

இதனை அடுத்து மோட்டார் சைக்கிளை கைவிட்டுவிட்டு வீட்டுக்குத் தான் தப்பிச் சென்றுவிட்டதாகவும் - தன்னுடன் பயணித்த இளைஞருக்கு என்ன நேர்ந்தது என்று தனக்கு தெரியவில்லை என்றும் குறிப்பிட்ட இளைஞர் யாழ். வைத்தியசாலையில் வைத்து உதயனுக்கு தெரிவித்தார். (எ-78)

## மரண அறிவித்தல்

### திருமதி கிறிஸ்தோப்பர் (மகராசா) மேரி டெய்ஸ்சி

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்தோப்பர் (மகராசா) மேரி டெய்ஸ்சி கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பரின் அன்பு மனைவியும் திருமதி ஜெனி ராஜ்கரன் (சுவிஸ்), சுபாஷினி கிறிஸ்தோப்பர் ஆகியோரின் அன்புத் தாயும் துரைராசா ராஜ்கரனின் அன்பு மாமியும் எஸ்தரம்மா, கிறில் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.08.2006) திங்கட்கிழமை பிற்பகல் கொட்டடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 16 நொத்தாரிஸ் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
சுபாஷினி கிறிஸ்தோப்பர்
(மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.